
பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 07 | புதன்கிழமை | 24.12.2025 | அதிர்வு 146

## புதுடில்லிக்கு புறப்பட்டார் ஜெய்சங்கர்



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி.எஸ். ஜெய்சங்கர், தனது உத்தி 07

# தமிழர் தாயகத்தில் சீனா, பாக். காலூன்றுவதை உறுதி செய்யும் ஆவணங்கள் ஜெய்சங்கரிடம்!

## தமிழரசு நேற்று நேரில் சமர்ப்பித்தது எனத் தகவல்



(ந.லோகதயாளன்)

இலங்கையின் வடக்கு, கிழக்கில் சீனாவும், பாகிஸ்தானும் ஆழக் கால் ஊன்றுவது தொடர்பில் சில ஆதாரங்களுடனான விவரங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தியாவின் வெளிவிவகார அமைச்சரிடம் நேற்றைய சந்திப்பின் போது சமர்ப்பித்தனர் என அறியவந்தது.

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரை இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தப் பேச்சின் இறுதியில் இலங்கையை மையமாக வைத்து இடம்பெறும் பூகோள அரசியல் போட்டி, அதனால் இலங்கை மட்டுமன்றி இந்தியா எதிர்கொள்ளக் கூடிய 06

# பெருந்தோட்ட மக்களுக்குப் பாதுகாப்பான இடங்களில் காணிகள் கட்டாயம் வேண்டும்

## இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பில் மலையக அரசியல் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை



“மலையகப் பெருந்தோட்ட மக்களுக்குப் பாதுகாப்பான இடங்களில் காணிகள் கட்டாயம் வேண்டும். இதனை இலங்கை அரசிடம் இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.” - இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரிடம் தாம் கோரிக்கை விடுத்தோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். 07




தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்புதான் தமிழர் தரப்பில் இப்போது பேசு பொருள்.

தமிழர் தரப்பில் சந்தித்த எட்டு தலைவர்களுமே மாகாண சபைத் தேர்தல்களை இனியும் இழுத்தடிக்காமல் விரைந்து நடத்தும்படி கொழும்புக்கு புதுடில்லி அழுத்தம் தர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

அதனைச் சாதகமாகச் செவிமடுப்பவராக ஜெய்சங்கர் வெளிப்படுத்திக் கொண்டாராயினும் அவரது பேச்சின் வரிகளுக்கு இடையே எதிரொலித்த தொனி, அந்த விடயத்தை இந்தியா இப்போதைய கட்டத்தில் வலியுறுத்த மாட்டாது என்பதாக அமைந்தது என அறிய வந்தது.

பேரிடரில் சிக்கியிருக்கும் நாட்டினது நிர்வாகத்திடம் பேரிடர் மீட்சி பற்றியே இந்தக் கட்டத்தில் பேச முடியும். இன்னும் சற்றுக் காலம் போன பின்னர்தான் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து புதுடில்லி ஏதேனும் 06

## முல்லைத்தீவில் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட

# சிறுமியின் இறப்பில் சந்தேகம்!




## பிரேத பரிசோதனை எதுவுமின்றி பெற்றோரிடம் சடலத்தை ஒப்படைத்த மருத்துவமனை நிர்வாகம்

**(புதுக்குடியிருப்பு நிருபர்)**

உணவு ஒவ்வாமையால் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 12 வயது சிறுமி உயிரிழந்தார். எனினும், சிறுமியின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக அவரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு – சிலாவத்தையை சேர்ந்த குகநேசன் டினோஜா என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருபவை வருமாறு,

உயிரிழந்த சிறுமி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாட்டிறைச்சி உட்கொண்டுள்ளார். இதைத் தொடர்ந்து ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டுள்ளார். சிறுமியின் தாயார் அவரை முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளார்.

அங்கு சிறுமிக்கு ஊசி மூலம் ஒவ்வாமைக்கான மருந்து செலுத்தப்பட்டது. அந்த ஊசி செலுத்தப்பட்ட சிறிது நேரத்தில் சிறுமி உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது. சிறுமியின் மரணத்துக்கு ஒவ்வாமை மருந்து அதீதமாக செலுத்தப்பட்டமையே காரணம் என்று மருத்துவமனையைச் சேர்ந்தவர்கள் தமக்குத் தெரிவித்தனர் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதே குற்றச்சாட்டை மருத்துவமனை வட்டாரங்களை அடிப்படையாகக் கொண்டு அங்குள்ள ஊடகவியலாளர்களும் தமது சமூகவலைத்தளங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில், உரிய பிரேத பரிசோதனை எதுவுமின்றி சிறுமியின் சடலத்தை மருத்துவமனை நிர்வாகம் ஒப்படைத்துள்ளது என்றும், இது தொடர்பில் நீதியான விசாரணை அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதனிடையே, இவ்வாறான சம்பவங்கள் முல்லைத்தீவு மருத்துவமனையில் தொடர்கின்றன. அங்கு சட்ட மருத்துவ அதிகாரி ஒருவர் சேவையில் இல்லாதமையும் இவை தொடர ஒரு காரணம் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேசமயம், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முல்லைத்தீவு பொது மருத்துவமனை நிர்வாகத்தின் கருத்துக்களை உடனடியாகப் பெற முடியவில்லை.

# யாழ்ப்பாணத்தில் நேற்று போதைப்பொருள்களுடன் பாடசாலை மாணவன் ஒருவன் உட்பட 10 பேர் கைது!



**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் நகரில் பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின் போது 17 வயதான பாடசாலை மாணவன் ஒருவர் உள்ளிட்ட 10 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.தலைமையகப் பொலிஸார் நேற்றுக் காலை நடத்திய சுற்றிவளைப் பின்போது கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஐஸ் போதைப்பொருளுடன் 4 பேரும், போதை மாத்திரைகளுடன் 5 பேரும், கேரள கஞ்சாவுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதான சந்தேகநபர்களிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.



# இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும்!

## ஜெய்சங்கரிடம் சஜித் வலியுறுத்து

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள "இந்திய இல்லத்தில்" நடைபெற்றது.

இதன்போது, இலங்கையில் "டித்வா" சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, இந்திய அரசு முன்னெடுத்த "சாகர் பந்து" திட்டத்துக்காகச் சஜித் பிரேமதாஸ நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

மேலும், 100 மில்லியன் டொலர் நன்கொடை மற்றும் 350 மில்லியன் டொலர் சலுகைக் கடன் என மொத்தம் 450 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியமைக்காக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய அரசுக்குக்கு சஜித் பிரேமதாஸ பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, அனர்த்த முகாமைத்துவம் குறித்த முக்கியக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

2004 ஆம் ஆண்டு சுனாமியிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு சரியான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை உருவாக்கத் தவறியதாலேயே, இந்தச் சூறாவளியில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டுக்கு முறையான அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் திட்டமும் அவசியம் என்றும் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

இதனிடையே, 1999 ஆம் ஆண்டு ஒடிசாவில் ஏற்பட்ட சூறாவளிப் பாதிப்புக்குப்பின்னர் இந்தியா தனது அனர்த்த முகாமைத்துவ முறையை மாற்றியமைத்ததன் மூலம், பிந்தைய காலங்களில் இலட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியதை இந்திய வெளிவிவகார அமைச்சர் உதாரணமாகச் சுட்டிக்காட்டினார்.

அந்த மாதிரியை இலங்கையும் பின்பற்றுவது சிறந்தது எனவும் சஜித் பிரேமதாஸ பரிந்துரைத்தார்.

இதனிடையே, இந்திய அரசு வழங்கும் உதவிகள் மிகவும் வெளிப்படையான முறையில் மக்களைச் சென்றடைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குமாறும் இதன்போது அவர் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.







# தமிழ்ச் சங்கத்தில் திலகரின் உரை!



கொழும்பு தமிழச் சங்கத்தின் இலக்கியக்களம் நிகழ்வில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு எழுத்தாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான மல்லியப்புசந்தி திலகர் “அசையும் மலையும் அயராத மக்களும் மலையக மக்களின் இருபுக்கான போராட்டம்” என்ற தொனிப்பொருளில் உரையாற்றுகின்றார்.

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 02 சபாபதி வீதி 96, 96/1 எனும் வரி மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்களின் உரிமையாளர் வேலன் கதிரவேலர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு வீ.நவரத்தினராசா முகதாவில் 1956.01.16ம் திகதி 4986ம் இலக்கத்தில் நிறைவேறிய கடன் உறுதி மூலம் வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த வேலன் கதிரவேலுவும் இராமு தம்புவும் பெண் சின்னப்பிள்ளையும் அவ்வூர் கனகசபை கைம்பெண் சோதிப்பிள்ளைக்கும் கனகசபை மகள் மகாரோசினிக்கும் கடன் உறுதி மூலம் வழங்கியுள்ளனர்.

தொடர்ந்து இராமு தம்பு மகள் நீலாம்பிகை பிரசித்த நொத்தாரிசு கதிரவேலு சிவசுப்பிரமணியம் முகதாவில் 24.11.2003 ம் திகதி 2710ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதிமூலம் குறித்த ஆதனத்தை தனக்குரியது என வெளிப்படுத்தியுள்ளார். அவ்வுறுதியின் ஆதன இடாப்பின் விபரிக்கப்படும் ஆதனத்திற்கு எனது காலஞ்சென்ற பிதா, மாதா ஆகிய இராமு தம்புவும் பெண் சின்னப்பிள்ளையும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் 9147ம் இலக்க பிரிவிடல் வழக்கின் இறுதித் தீர்வையின் பிரகாரம் சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்றும் இவ்வாதனம் யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவகத்தில் டி 142/284 ல் பதியப்பட்டுள்ளது என்றும், எனது பெற்றோர்கள் குறித்த ஆதனத்தை 1956.01.16ம் திகதி பிரசித்த நொத்தாரிசு வீ.நவரத்தினராசா அத்தாட்சிப்படுத்திய 4986ம் இலக்க உறுதியால் ரூபா மூவாயிரத்திற்கும் வட்டிக்கும் ஈடாக கனகசபை கைம்பெண் சோதிப்பிள்ளைக்கும் மகள் மகாரோசினிக்கும் கட்டுப்படுத்தி பின்னர் குறித்த ஈட்டு முறியின் பேரால் செலுத்த வேண்டிய முதல் வட்டியைச் செலுத்தி குறித்த ஈட்டு முறை 1969ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ம் திகதி இரத்துச் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் டி 244/200 இல் பதியப்பட்டுள்ளதென்றும் இப்புத்தகம் பதிவகத்தில் பழுதடைந்து விட்டதென்றும், எனது பெற்றோர்கள் குறித்த ஆதனத்தை எவருக்கும் மாறாததும் எவ்வித இடையூறுகளுமற்ற சுயாதீனமாக ஆண்டனுபவித்து எனது தாயார் இறக்க பிள்ளைகளான அப்புத்துரை பெண் நேசம்மா, பொன்னுத்துரை பெண் தங்கம்மா, சிங்கராசா பெண் கதிரமலர் ஆகியோரும் நானும் எங்கள் பிதாவாகிய இராமு தம்புவும் ஆண்டனுபவித்து வந்தோம் என்றும், எமது பிதா இராமு தம்பு எனது சகோதரிகளாகிய மேற்படி அப்புத்துரை பெண் நேசம்மாவுக்கும் பொன்னுத்துரை பெண் தங்கம்மாவிற்கும் சிங்கராசா பெண் கதிரமலரிற்கும் வேறு ஆதனங்களை சீதனமாக கையளித்துள்ளார் என்றும் குறித்த எனது பிதா மரணித்து விட்டமையால் இதன்பின் விபரிக்கப்படும் ஆதனம் எனக்கே முழுமையாக வந்தடைந்ததென்றும் வெளிப்படுத்தியுள்ளார். ஆதனமாக வண்ணார்பண்ணை கிழக்கிறை “செம்மண் கிடங்கடி நிலப்பரப்பு 3ம் குளி 1 38/50 வீடும் கிணறும் பயிர்வகைகளும் என வெளிப்படுத்தியுள்ளார்.

தம்பித்துரை பெண் நீலாம்பிகை தற்பொழுது (தம்பு மகள் நீலாம்பிகை) என்பவர் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 09.02.2009ம் திகதி 2467 ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் குகனேந்திரராசன் பெண் தர்மினிக்கு தனது சீவிய நலவுரித்துக்கு அமைவாக அதே அளவு கொண்ட ஆதனத்தை சீதனமாக வழங்கியுள்ளார்.

அதன் பின்னர் கொக்குவில் கிழக்கு அம்பகர் வீதியைச் சேர்ந்த கணபதி குகனேந்திரராசாவும் பெண் தர்மினியும் பிரசித்த நொத்தாரிசு த.விக்கினராசா முகதாவில் 2018.11.10ம் திகதி 2225 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் கொக்குவில் சபாபதி ஒழுங்கை இல 96, 96/1 ஐ சேர்ந்த வல்லி தியாகராசாவிற்கும் பெண் சரோசாவிற்கும் அதே ஆதனத்தை அறுதியாக நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை கிழக்கு இறை யாழ்ப்பாணம் மாநகரசபை நாவாந்துறை கிழக்கு வட்டாரம் 23 (பழையது), நல்லூர் பிரதேச செயலர் பகுதி, J / 100 வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராமசேவகர் பகுதி, வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 96, 96/1 “செம்மண் கிடங்கடி” பரப்பு நிலம் இலாச்சம் 3ம் குளி 1 38/50 வீடும் கிணறும் வான்பயிர், செய்பயிர்களும் இதற்கு எல்லைகள

கிழக்கு – சின்னப்பொடியன் மாணிக்கத்துக்குரிய ஆதனம்,
வடக்கு – ரோட்டு
மேற்கு – பொன்னன் தம்பையாவிற்கும் மனைவிக்கும் உரிய ஆதனம்
தெற்கு – கையொழுங்கை
இதனிடங்களும்

தற்போது இவ்வாதனத்தை வல்லி தியாகராசாவும் பெண் சரோசாவும் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வல்லி தியாகராசாவும் பெண் சரோசாவும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்**





### சகல சந்தர்ப்பங்களிலும்

# இலங்கைக்கு சீனா தோள் கொடுக்கும்!

## அந்நாட்டு உயர்மட்ட தூதுக்குழு ஜனாதிபதி அநுரவிடம் தெரிவிப்பு

அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்க சீனா நடவடிக்கை எடுக்கும் எனவும், "ரீ பில்டிங் ஸ்ரீலங்கா" திட்டத்தில் சீனாவின் அனுபவத்தை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளத் தயார் எனவும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது மத்திய குழுவின் உறுப்பினரும் ஷீ சங் தன்னாட்சி பிராந்தியத்தின் கம்யூனிஸ்ட் கட்சி குழுவின் செயலாளருமான வேங் ஜுன் ஸெங் தெரிவித்தார்.

சீனத் தூதுக் குழுவுடன் இலங்கைக்கு



வருகை தந்துள்ள வேங் ஜுன் ஸெங், நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

அனர்த்த நிலைமையில் இலங்கைக்கு சீனா வழங்கிய அவசர மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கு இதன் போது ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். இந்தக் கடினமான நேரத்தில் இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கிய ஆதரவையும் அவர் பாராட்டினார். இது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நெருங்கிய நட்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

மக்களின் அன்றாட வாழ்க்கையை மீளமைக்கவும் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் தொடங்கப்பட்டுள்ள "ரீ பில்டிங் ஸ்ரீலங்கா" திட்டம் குறித்து சீனக் குழுவுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய சீன விஜயத்தின் போது இரு நாடுகளின் ஜனாதிபதிகளுக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு மற்றும் நட்புறவை மேலும் வலுப்படுத்தி, சீனா இலங்கையுடன் தொடர்ந்து பணியாற்றும் என்று தெரிவித்த வேங் ஜுன் ஸெங், இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவும், புதிய திட்டங்களைத் ஆரம்பிக்கவும் சீனா தொடர்ந்து ஒத்துழைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புத் திட்டம் போன்ற அரசின் முதன்மைத் திட்டங்களுக்கு சீனா ஆதரவளிக்கும் என்றும், குறிப்பாக கிராமிய வறுமையை ஒழிப்பதில் சீனாவின் அனுபவத்தை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளத் தேவையான உதவிகளை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துக்களை கொழும்புக்கு தெரிவிக்க முடியும் என்ற நிலைப்பாடு ஜெய்சங்கரின் பதில்களின் ஊடே தொனித்ததாக அறிய வந்தது.

மாகாணசபைத்தேர்தல்களைஎப்போது நடத்தும் யோசனை அரசுக்கு இருக்கின்றது என்ற சார்பிலான கேள்வியைக் கேட்டார் ஜெய்சங்கர்.

அடுத்த வருடத்தில் நடத்துவோம் என்று இப்போது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா கூறுகிறார் என தமிழ்த் தலைவர் ஒருவர் பதில் அளித்த போது குறுக்கிட்டார் ஜெய்சங்கர்.

“அதாவது இந்த வருடத்தின் இறுதியில் இருந்து கொண்டு, அடுத்த வருடம் அந்தத் தேர்தல் என்று கூறுகின்றாரா?” என விளக்கம் கேட்டார் இந்திய அமைச்சர்.

“இல்லை... இல்லை...போன வருடம் (2024 இல் இருந்து கொண்டு) அடுத்த வருடத்தில் (2025 இல்) மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம் என்றார். இப்போது இந்த வருடம் (2025 இல் இருந்து கொண்டு) அடுத்த வருடம் தேர்தல் என்கிறார். அடுத்த வருடம் பிறந்ததும் அப்போதும் அதற்கு அடுத்த வருடம் தேர்தல் என்று கூறுவார் போலும்” என்ற சாரப்பட ஒரு தமிழ் தலைவர் பதிலளித்தமையை நகைச்சுவையோடு செவிமடுத்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர்.

மீனவர்கள் போராட்டம் பற்றிப் பேச்சு திரும்பிய போது, தேசிய மக்கள் சக்தியின் பிரமுகர்கள் வடக்கில் இருந்து இந்தியத் துணைத் தூதரகத்தை அகற்ற வேண்டும் என்று பகிரங்கமாகக் கருத்து கூறியமையை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்திய அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினார்.

“இங்கு இருக்கின்ற நாங்கள் எல்லோரும் இந்தியாவுக்கும் நெருக்கமானவர்கள். தமிழகத்திற்கும் நெருக்கமானவர்கள்” அச்சமயம் என்று சான்றிதழ் கொடுத்தார் கஜேந்திரகுமார்.

அப்போதுதான் தமிழகம் சென்று திரும்பி இருக்கும் கஜேந்திரகுமார், இந்தியாவுடனான நட்பு மற்றும் உறவு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு – அதுவும் இந்த விடயங்களை நன்கு உணர்ந்த – அறிந்த – பச்சைத்தமிழரான ஜெய்சங்கருக்கு புதிய பாடம் போதிக்கின்றமை போல இதைச் சொன்னமை ஏனைய தலைவர்களுக்கு நிச்சயம் வியப்பாக இருந்திருக்கும்.

இதுவரை காலம் இந்தியாவோடு நெருக்கமாக இருந்த மற்றைய தலைவர்களை ‘இந்திய அடிமைகள்’ என்ற சாரப்பட அவ்வப்போது விமர்சித்து வந்த கஜேந்திரகுமார், இப்போது இந்தியாவோடு நெருங்குவதற்கு அவர்களையும் தமது சகாக்களாக ஒன்றிணைத்து ‘நாங்கள் எல்லோரும் இந்தியாவுக்கு நெருக்கமானவர்கள்’ என்ற சாரப்பட குறிப்பிட்டமை புதிய திருப்பம் தான். எதுவாயினும், சாமி மீண்டும் மலையேறாமல் இருந்தால் சரி.

மீனவர் பிரச்சினை குறித்துப் பேசப்பட்ட சமயம் இந்திய வெளிவிவகார அமைச்சரை நெருங்கும் விதத்தில் சிறிதரன் எம்.பி. சொன்ன கருத்து பலருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

இலங்கை மீனவர்கள் கடலுக்குப் போகாத நாள்களில் இந்திய மீனவர்கள் சற்றுத் தூரம் வந்து மீன் பிடித்து செல்வதற்கு எழுதப்படாத அனுமதி வழங்கப்பட்டிருப்பது போன்ற இப்போதைய நிலைமையை சற்று விஸ்தரிக்கலாம் என்று சாரப்பட சிறிதரன் கருத்துக் கூறினார் எனத் தெரிகிறது.

அதைப் பற்றிப் பிடித்துக் கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர், “ஆமாம் அத்தகைய நாள்களில் நாங்கள் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க உரிமம் கொடுக்கலாம்” என்ற சாரப்பட பேச்சை விஸ்தரிக்க முற்பட்டார்.

“இல்லை... இல்லை... அடி மீன்பிடி வலை மூலமான கடற்றொழிலுக்கு அனுமதிக்க முடியாது. அது பற்றி எல்லாம் 2017–இல் இலங்கை – இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பான கூட்டறிக்கையில் தெளிவாக உள்ளது.” – என்று சொல்லி விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கச் செய்தார் சுமந்திரன்.

2017 இல் இல் அந்தக் கூட்டறிக்கையின் நகல் வரைவை தம் கைப்பட வரைந்தவரே அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்த ஜெய்சங்கர்தான். அதனால் சுமந்திரனின் அந்த கருத்தோடு அந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார் அமைச்சர் ஜெய்சங்கர். இல்லாவிட்டால் இந்திய மீனவர்கள் இலங்கை கடலுக்குள் மீன் பிடிக்க வருவதற்கு அனுமதிப்பது பற்றிய உரிமம் வழங்கும் விவகாரம் வரை பேச்சு விரிவடைந்து இருக்குமோ என்னவோ....!

உயர்மட்ட ராஜதந்திரிகளை – நாட்டுத் தலைவர்களை – சந்திக்கும் கோல உடையுடன் எல்லாத் தமிழ் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். எனினும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் உடைத் தோற்றம் குறித்து பேச்சுக்களில் பங்கு பற்றிய ஒரு சிலர் அதிருப்தி தெரிவித்தனர்.

நீண்ட காலம் இலங்கை விவகாரத்தை இந்தியத் தரப்பில் ராஜதந்திரியாகவும், வெளி விவகார அமைச்சராகவும் கையாண்டு வருபவர் ஜெய்சங்கர். இந்த விடயத்தில் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாக நீண்ட காலம் பங்குபற்றி வருபவர்களில் செல்வம் அடைக்கலநாதனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் குறிப்பிடத்தக்கவர்கள். நேற்றைய பேச்சின் போது இருவரையுமே ‘சுரேஷ்’ என்றும் ‘செல்வம்’ என்றும் பெயர் சொல்லி நெருக்கமாக அழைத்தார் ஜெய்சங்கர். அத்தகைய நெருக்கம் காரணமாகவோ என்னவோ தமது உடை ஒழுங்கில் சுரேஷ் கவனம் எடுக்காமல் விட்டிருக்க கூடும் என்று நினைக்கிறேன்.

பங்கு பற்றிய தமிழ்ப் பிரதிநிதிகள் குழுக்களில் சிரேஷ்ட நிலையில் இருப்பது தமிழரசு கட்சி. அதன் தலைவர் சி.வி.கே.சிவஞானம்தான் நேற்றுப் பங்குபற்றியவர்களில் மூத்தவர். ஆகவே பேச்சை ஆரம்பித்துத் தொடங்கி வைக்கும் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டு கனகச்சிதமாக நகர்த்தினார். ஒரு கட்டத்தில் அந்தப் பொறுப்பை அவர் சுமந்தனிடம் ஒப்படைத்தார். அவர்கள் இருவரின் பின்னர் மற்றைய எல்லோருக்கும் கருத்து வழங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

ஜெய்சங்கர் தமிழர் என்பதால் சிறிதரனும் செல்வமும் நேரடியாகத் தமிழிலேயே சரளமாகக் கருத்துப் பரிமாறினர். மற்றவர்கள் ஆங்கிலத்தில் தங்கள் கருத்தை முன் வைத்தனர்.

மாகாண சபைத் தேர்தல் குறித்துக் கருத்து தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இப்போது ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்குச் செல்ல இருக்கிறார், அவர் மாகாண சபை முறைமையையே ஒழித்து, நிறைவேற்றதிகாரம் கொண்ட ஆளுநர் மூலம் மாகாணங்களை நிர்வகிப்பது பற்றிப் பேசுகிறார். அவருக்குத் தெளிவான அறிவுறுத்தலை புதுடில்லி வழங்க வேண்டும் என்று சுரேஷ் கோரிக்கை முன்வைத்தார் எனத் தெரிகிறது.

ரில்வின் சில்வாவின் புதுடில்லி வருகை இந்தப் புயல் பாதிப்புக் காரணமாகத் தள்ளிப் போவதாக அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

நேற்று அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்திப்பதற்கு முன்னர், அவரோடு என்ன பேசுவது என்பது குறித்துத் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்குள் ஒரு சுற்றுக் கூடி ஆராய்ந்தார்கள். அதன் பின்னரே சந்திப்புக்கு கொழும்பு இந்திய ஹவுஸ்‘க்கு அவர்கள் வருகை தந்தனர். இந்தக் கூட்டத்துக்கு கஜேந்திரகுமார் தவிர மற்ற எல்லோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. மற்ற எல்லோரும் அதில் பங்கு பற்றினார்கள் – சிறிதரனைத் தவிர. அவர் அந்த கூட்டத்தில் பங்கு பற்றாமல் தவிர்த்து விட்டு, நேரடியாக கொழும்பில் இந்திய ஹவுஸில் நடைபெற்ற சந்திப்புக்கு வந்து சேர்ந்தார் எனத் தெரிகிறது. அதற்கு முந்தைய சந்திப்பை அவர் தவிர்த்தமைக்கான காரணம் தெரிய வரவில்லை. அதி லும் ஏதேனும் அரசியல் சூட்சுமம் பொதிந்து கிடக்கின்றதோ என்னவோ....!

---

## தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆபத்து ஆகியவை தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்தியாவைப் பாதிக்கும் வகையில் அந்திய சக்திகள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தைப் பயன்படுத்தத் தமிழர் தரப்பு அனுமதிக்காது என்று உறுதியளித்த தமிழரசுக் கட்சி, இந்தியாவுக்கு அண்மையில் உள்ள வடக்கு மாகாணத்தில் சீனா மற்றும் பாகிஸ்தான் தரப்புக்கள் போட்டி போட்டு இடம் பிடிப்பது தொடர்பில் சான்று மூலம் ஆதாரப்படுத்தும்சில ஆவணங்களையும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்தது எனத் தெரியவந்தது.

இவற்றினைப் பெற்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மிகவும் மிகவும் ஆர்வமாக அவற்றைக் கண்ணுற்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் சில இடங்களில் நிலைகொண்டிருந்த பாகிஸ்தானியர்கள் இப்போது வெளியேறி விட்டனர் என்ற ஒரு கருத்து அங்கு கூறப்பட்ட போதும், இல்லை அவர்கள் இன்னும் இருக்கின்றனர் என்ற தகவலும் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது என்று அறியவந்தது.

இப்படி ஏதேனும் ஆவணங்கள் கையளித்தீர்களா, அவற்றின் விவரம் என்ன என்று சுமந்திரனிடம் “முரசு” நேரடியாகக் கேட்ட போது அதற்குப் பதில் தர அவர் மறுத்து விட்டார்.

எனினும், சந்திப்பில் பங்குபற்றிய தரப்புகள் அத்தகைய ஆவணங்கள் சில தமிழரசுக் கட்சியினரால் சமர்ப்பிக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்தின.



# பாதிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு தலா 2 லட்சம் ரூபா வழங்கப்படும்

## முதற்கட்டமாக 531 பேருக்கு நிதி ஒதுக்கீடு

டித்வா சூறாவளி மற்றும் அதனால் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில் அலகுகளை மீண்டும் வழமைக்குக் கொண்டு வருவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக, 531 கைத்தொழிலாளர்களுக்கு தலா 2 லட்சம் ரூபா வீதம் நிதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஒரு கைத்தொழில் அலகிற்கு, அரசாங்கத்தால் ஒருமுறை மட்டும் வழங்கப்படும் கொடுப்பனவாக 2 லட்சம் ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் தரவுத் தொகுப்பின் மூலம் நாடு முழுவதும் சுமார் 10,000 கைத்தொழிலாளர்கள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் பிரதேச செயலக மட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 531 பதிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு முதற்கட்டமாக 106.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியை விநியோகிப்பதற்காக, கொழும்பு, கம்பஹா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கேகாலை, மொனராகலை, பதுளை, பொலன்னறுவை, இரத்தினபுரி மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களுக்குத் தேவையான நிதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால் வீழ்ச்சியடைந்துள்ள கைத்தொழில் துறையை மீண்டும் கட்டியெழுப்ப பல்வேறு திட்டங்களை அமைச்சு முன்னெடுத்து வருகிறது.

எதிர்காலத்தில் இத்தகைய அனர்த்தங்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் ஒரு வலுவான கைத்தொழில் துறையைக் கட்டியெழுப்புவதற்கான புதிய பொறிமுறையொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

---

### பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர், கொழும்பில் நேற்று மலையக அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் மேற்படி சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் பேசப்பட்ட விடங்கள் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களிடம் கூறியவை வருமாறு:-

“பேரிடரில் மலையக மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மலையக மக்களுக்குப் பாதுகாப்பான இடங்களில் காணிகள் வேண்டும். மலை உச்சியில் இருந்து அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியேற்ற வேண்டும். இது தொடர்பில் இலங்கை அரசிடம் கோரியுள்ளோம். இந்திய அரசிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம். தமது நட்புறவைப் பயன்படுத்தி இது தொடர்பில் இலங்கையிடம் பேசுமாறு இந்திய அரசிடம் கோரியுள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதுகாப்பான காணியைத் தருவார் என நம்புகின்றோம். தரவேண்டும்.” - என்றார்.

---

### புதுடில்லிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து இலங்கையில் இருந்து இந்தியாவின் தலைநகர் புதுடில்லிக்குப் புறப்பட்டார்.

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விசேட விமானத்தில் அவர் நேற்று முன்தினம் மாலை இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கான நிவாரண உதவி மற்றும் மீளக் கட்டியெழுப்பும் திட்டங்கள் குறித்து நேரில் ஆராய, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை தனது விசேட பிரதிநிதியாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அனுப்பி வைத்திருந்தார்.

அதற்கமைய ஜெய்சங்கர் நேற்று கொழும்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள், மலையகக் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இலங்கைக்கான இந்தியாவின் பேரிடர் உதவித் தொகையையும் அவர் அறிவித்திருந்தார்.

இதன்பின்னர் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தலைமையிலான அதிகாரிகள் குழுவினரும், இலங்கை வெளிவிவகார

அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் குழுவினரும் ஜெய்சங்கர் விடைபெறுவதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# ஆக்கிரமிப்பு நியாயம்

இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, அதன் பெயரில் வீடுகளிலும் வளவுகளிலும் இருந்தோரை எழுப்பிக் கலைத்து விட்டு, புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தான் கைப்பற்றிய பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு, அதில் அடாத்தாக விகாரையை அமைத்திருக்கும் பேரினவாதம் தன்னிஷ்டப்படி காணியைக் கபளீகரம் செய்ய முடிவெடுத்து விட்டது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் திஸ்ஸ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரர் இப்போது கூறும் கருத்து இதனை உறுதிப்படுத்துகின்றது.

மக்களின் காணியை அடாத்தாகக் கைப்பற்றி வைத்திருப்போர் அதில் ஒரு பகுதியை 'தாராள மனது பண்ணி' விட்டுக் கொடுப்பது குறித்து புத்தர் போல உபதேசம் பேசுகின்றனர்.

"விட்டுக் கொடுப்பது பௌத்த தர்மமாகும். திஸ்ஸ விகாரைக்கு தேவையான காணியை வைத்துக் கொண்டு மிகுதிக் காணியை கோருபவர்களுக்கு - தமிழ் மக்களுக்கு - வழங்கி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சிறந்ததாக அமையும்" - என்று கிந்தொட்ட நந்தாராம தேரர் குறிப்பிட்டார்.

அவருக்கு அமரபுர ஸ்ரீ கல்யாணவங்ச நிகாய உத்தரலங்கா உப பிரதான சங்க நாயக்க பதவி கடந்த ஞாயிற்றக்கிழமை கொழும்பில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றிய சமயமே தையிட்டி விகாராதிபதி கிந்தொட்ட நந்தாராம தேரர் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

"திஸ்ஸ விகாரையை அடிப்படையாகக் கொண்டு இன்னும் ஓரிரு மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் பிரச்சினை தோற்றம் பெறாத வகையில் தீர்வு காண்பது மிகவும் சிறந்ததாக அமையும். சகல பிரச்சினைகளுக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கும். இந்த பிரச்சினைக்கும் இரு தரப்பு பேச்சுவார்த்தை ஊடாகத் தீர்வு காண வேண்டும். விட்டுக் கொடுப்பது பௌத்த தர்மமாகும். விகாரைக்குத் தேவையான காணியை வைத்துக் கொண்டு மிகுதி காணியை கோருபவர்களுக்கு, தமிழ் மக்களுக்கு வழங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சிறந்ததாக அமையும். திஸ்ஸ விகாரையை முன்னிலைப்படுத்தி தொடர்ச்சியான முரண்பாடுகள், பிரச்சினைகள் தோற்றம் பெறுவது முறையற்றது. இதற்கு உரிய தலைமைத்துவத்தின் ஊடாக பேச்சுகளை மேற்கொண்டு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும்" - என்று அங்கு அவர் கூறியிருக்கின்றார்.

ஆக, மக்களின் சொத்தை இராணுவ நடவடிக்கையின் பெயரில் சூறையாடியோர், தாம் சூறையாடியதில் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதை பெரிய பௌத்த தத்துவம் போல உபதேசிக்கின்றனர்.

இதுதான் 'ஆக்கிரமிப்பு நியாயம்' போலும்....!



### இந்திய வெளிவிவகார அமைச்சரிடம்

# நான்கு கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தைக் கையளித்த ஜீவன்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் நேற்று கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது, இந்திய வம்சாவளி தமிழ்ச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் தொடர்பான விடயங்கள், டித்வா சூறாவளியின் பின்னரான அனர்த்த நிலைமைகள் மற்றும் குறிப்பாக மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரிடம் ஜீவன் தொண்டமான் எம்.பி. விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், இக்கட்டான காலகட்டத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய தொடர்ச்சியான ஆதரவுகளுக்குத் தனது நன்றியையும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக, 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அடங்கிய உதவிகளுக்கும், அவற்றைச் செயற்படுத்திய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும், அவரது குழுவினருக்கும் நன்றியையும் ஜீவன் தொண்டமான் எம்.பி. தெரிவித்துக்கொண்டார்.



இந்த விசேட சந்திப்பின் போது, இந்தியாவின் ஒத்துழைப்பை மையமாகக் கொண்ட நான்கு முன்னுரிமை அம்சங்களை உள்ளடக்கிய ஆவணமும் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரிடம் கையளிக்கப்பட்டது.

01. இந்தியா – இலங்கை கொள்கை மற்றும் சிந்தனை வழித்தடத்தை நிறுவனமயமாக்குதல்.

02. இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்துக்கான நடைமுறை பொருளாதார வாய்ப்புகள் மற்றும் சந்தை வாய்ப்புகள்.

03.மலையகப்பகுதிகளுக்கானவெள்ளம் மற்றும் காலநிலை அனர்த்த முகாமைத்துவ உட்கட்டமைப்புகள் மூலம் அனர்த்த மீள்தன்மை.

04. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை அடிப்படையாகக் கொண்ட இளைஞர் ஈடுபாட்டுத் திட்டங்கள் போன்ற முன்னுரிமை அம்சங்களாகும்.

இந்தச் சந்திப்பு, இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவையும், மலையக மக்களின் நலன் மற்றும் நிலையான எதிர்காலத்துக்கான கூட்டு முயற்சிகளையும் மேலும் வலுப்படுத்தும் முக்கிய அடித்தளமாக அமைந்துள்ளது என்று ஜீவன் தொண்டமான் எம்.பி. தெரிவித்தார்.



# சட்டம் சிலருக்குக் கவசம்; பலரையும் அடக்கும் ஆயுதம் தையிட்டி திஸ்ஸ விகாரையில் அதுவேதான் நிரூபணம்

## அருட்தந்தை சத்திவேல் விசனத்துடன் விளக்கம்

**(பா.சதீசன்)**

சட்டம் என்பது அனைவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய இலங்கையில் அந்த சட்டம் சிலருக்கான கவசமாகவும், மற்றவர்களுக்கு அடக்குமுறையின் ஆயுதமாகவும் மாறியுள்ளது. தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான விவகாரம் இதற்கு மிகத் தெளிவான உதாரணமாகும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது மிக அண்மைய உதாரணங்களான திட்வா புயல் மற்றும் சுனாமியை விட நாட்டில் நிறுவனமயப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தால் பாதுகாக்கப்படும் சிங்கள பௌத்த பேரினவாதம் பயங்கரமானது. சட்டவிரோத கட்டடமான திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று முன்தின 21 ஆம் திகதி நடந்த போராட்டத்தில் இந்து மத குரு உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டாலும், போராட்டத்தின் போது பொலிசாரின் நடவடிக்கை, போராட்டத்தில் ஈடுபட்டோரை கைது செய்த விதம் சிங்கள - பௌத்தத்தின் கோர முகத்தினை மட்டுமல்ல, இனவாத மதவாதத்தினை இல்லாமல் செய்வோம் என அடிக்கடி அலங்கார வசனம் பேசும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவினதும் அவரது தலைமைத்துவத்திலான தேசிய மக்கள் சக்தியினதும் அகோர முகத்தினை வெளிக்காட்டியது. இது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதே.

திட்வா புயல்,மழை, வெள்ளம் மண் சரிவை தொடர்ந்து சட்ட விரோத கட்டடங்கள் தொடர்பான விடயம் பேச்சுப் பொருளாகியுள்ளது. சிங்கள - பௌத்த பேரினத்தின் அடையாளமானதும் நல்லிணக்கத்திற்கு எதிரானதுமான சட்டவிரோத விகாரையை ஆட்சியாளர்கள் அகற்றாது, அதனைஒ பாதுகாப்பதற்கு எடுக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் துணிவில்லாதிருப்பதேன்?

இன்னும் தையிட்டி விகாரை நாட்டின் சட்ட விதிமுறைகளுக்கு எதிரானது.இது, இன அமைதிக்கு எதிரானது மட்டுமல்ல தமிழர்களுக்கு எதிரான இன்னொரு சுற்று இன அழிப்பு போருமாகும். அன்று முப்படைகள் செய்ததை இன்று அவர்களின் துணையோடு பௌத்த மகா சங்கம் நேரடியாகக் களத்தில் இறங்கி வெளிப்படையாகவே செய்வதாகத் தோன்றுகின்றது. தேசிய மக்கள் சக்தியும் அவர்களின் காலடியில் விழுந்து அரசியல் செய்வதாக தமிழ் மக்கள் உணர்கின்றனர்.



இந்நிலையில் தற்போதைய சட்ட விரோத விகாரையின் பிக்குவிற்கு அரச ஆதரவோடு பதவி உயர்வு கொடுப்பது என்பதும் எதிர்வரும் புது வருடத்தில் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி அவ் விகாரை அமைந்திருக்கும் மக்களுக்கு சொந்தமான காணியில் புத்தர் சிலை வைக்க மாகா சங்கத்தினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து அதற்கான பாதுகாப்பை கோரி இருப்பது தமிழர்களை போராட்டத்திற்குள் தள்ளி இன்னுமொரு இன வன்முறைக்கு வித்திடும் கொடூர செயலுமாகும். திட்வா பேரிடருக்கு முகம் கொடுத்து அவல நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இன்னும் ஒரு அவலத்தை சந்திப்பதற்கு நாடு ஆயத்தமில்லை. இதனை ஆட்சியாளர்கள் உணர்ந்து அதனைத் தடுத்து நிறுத்துமாறும் கேட்கின்றோம்.

சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் என்பது பௌத்த மதத்திற்கு எதிரான போராட்டமோ, அம்மதத்தினை பின்பற்றும் சிங்களவர்களுக்கு எதிரான போராட்டமோ அல்ல. அதேபோன்று இந்துக்களின், தையிட்டி பிரதேசத்தில் அந்த விகாரையினால் காணிகளை இழந்த மக்களின் அல்லது அரசியல்வாதிகளின் போராட்டம் மட்டுமல்ல. அது கட்டமைக்கப்பட்ட இனமத ஆக்கிரமிப்புக்களோடு ஒடுக்குதலை தொடரும் அதனை பாதுகாக்கும் பேரினவாத அரச கட்டமைப்புக்கு எதிரானதுமான போராட்டமாகும்.

குறிப்பாக கிறிஸ்தவ சமூகம் இயேசுவின் பிறப்பிற்கு விழா எடுக்கும் காலகட்டமிது. இயேசுவின் இறை கொள்கையோடு மக்கள் விடுதலை செயற்பாட்டோடு பயணிப்பவர்களாக தம்மை அடையாளப்படுத்துவோர் அடக்குமுறைக்கு எதிரானதும் சிங்கள பௌத்த பெரும் தேசிய வாதத்தின் ஓர் அடையாளமாகவும் திகழும் சட்டவிரோத கட்டடத்திற்கு எதிரான போராட்டத்தினை வலுப்படுத்த வேண்டும். இயேசு அன்று கட்டமைக்கபட்டதும் நிறுவனமயமான அரச மற்றும் சமய அமைப்புகளுக்கு எதிராகவும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பெடுத்தும் நீதிக்கான அறப்போராட்ட வாழ்வையே தமதாக்கினார். அது கடவுளின் போராட்டம். இத்தகைய போராட்டத்தோடு இணைவதன் மூலமும் கூட்டாக எதிர்ப்பு குரலை உயர்த்துவதன் மூலமுமே விழாவை கருத்துள்ளதாக்கலாம். .இயேசு அருளிய முழு மனித விடுதலையை மக்களின் மக்கள் மயமாக்குவதே விழாவாக அமையும் என்பதையும் கூற விரும்புகின்றோம்.

தமிழர் தாயகம் எங்கும் புத்தர் சிலை வைப்பதற்கு முழு வீச்சோடு தொல்லியல் திணைக்களம் களத்தில் நிற்பதோடு, அரச மரக்கன்று விதைகளை தமிழர் நிலமெங்கும் வீசி விதைப்பதற்கு தம்மசம் வைத்துள்ளது. இதற்கு எதிராக தமிழர் தாயக மக்களை திராட்சியாகும் பொறுப்பு அனைத்து சமய அமைப்புகளுக்கும், அதன் தலைவர்களுக்கும், அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் பாரியளவில் சார்ந்ததாகும். இதனை தட்டி கழித்து விட்டு பக்தியில் மக்களை வழிநடத்த முடியாது. அரசியல் ரீதியில் மக்களைக் கட்டி எழுப்பவும் முடியாது. தமிழர் தாயகம் காக்க நாம் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும் எம் தாய் நிலம் பறிபோகும். எம் இனம் அழியும். அதன் பின் யாருக்காக சமயம்? யாருக்காக அரசியல்? தலைவர்கள் யாருக்காக? அவர்களின் கட்சிகள் யாருக்கு?- எனும் கேள்விகளை மக்கள் கேட்கும் முன்னர் கூட்டு செயல்பாட்டுக்கு உடனடியாக வழி வகுப்போம்.


இந்த அநீதிக்கு எதிரான போராட்டத்தை எட்டி நின்று பார்ப்பதும், பாரா முகத்துடன் இருப்பதும், நாட்டின் அமைதிக்குஎதிரானஅடிப்படைமனிதஉரிமைக்கு எதிரானதும், தமிழர் தேசியத்துக்கு எதிரான செயல்பாடு மட்டுமல்ல மனிதத்துவத்திற்கு எதிரானதும், சமயங்கள் போதிக்கும் அறநீதிக்கும் எதிரான செயலாகும் என்பதை வலியுறுத்து

# சிங்கள அரசினுடைய மறைமுக நடவடிக்கைதான் சைக்கிள் அணியினரின் தமிழக கபட நாடகங்கள்

## வைகோ, சுபவி, கொளத்தூர் மணி உட்பட ஈழ ஆதரவாளர்கள் கூட்டாகக் காட்டம்








23.12.2025

**ஈழத் தமிழினப் படுகொலைக்கான சர்வதேச விசாரணை கோரிக்கையை மூடி மறைக்கவும், சுதந்திரத் தமிழீழக் கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்யவும் சிங்கள அரசின் மறைமுக நடவடிக்கைதான் தற்போதைய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கை!**

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன், மனிதநேய மக்கள் கட்சி பேராசிரியர் ஜவாஹிருல்லா, திராவிட தமிழர் பேரவையின் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிட கழகத்தின் கோவை இராமகிருஷ்ணன், மே-17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் தியாகு, தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் மணியரசன், விடுதலை தமிழ்ப் புலிகள் குடந்தை அரசன், தற்சார்பு விவசாயிகள் சங்கத்தின் ஈரோடு பொன்னையன், இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், தமிழ்ப் புலிகள் கட்சி நாகை திருவள்ளுவன், எஸ்.டி.பி.ஐ. கட்சித் தலைவர் நெல்லை முபாரக், மனிதநேய ஜனநாயகக் கட்சியின் தமிமுன் அன்சாரி, முக்குலத்தோர் புலிப்படையின் கருணாஸ்

ஆகியோர் விடுத்துள்ள **கூட்டறிக்கை**

வரலாற்றின் வைகறை காலத்திலிருந்து தனி கொற்றம் அமைத்து, ஈழத்தமிழர்களின் வரலாற்றில் போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், பின்னர் பிரித்தானியர்கள் தனித்தனி அரசுகளாக இருந்த ஈழத்தமிழர் தேசத்தையும், சிங்கள தேசத்தையும் நிர்வாக வசதிக்காக ஒரே நாடாக்கி, பிரித்தானியர்கள் 1948 பிப்ரவரியில் வெளியேறியபோது, சிங்களர்களின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை தந்ததால் ஈழத்தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்கள் ஆக்கப்பட்டனர்.

ஈழத்தமிழர்கள் தந்தை செல்வா தலைமையில் அடிப்படை உரிமைகளுக்காக அறப்போர் நடத்தியபோது, காவல்துறை, இராணுவத்தை சிங்கள அரசு ஈழத்தமிழர்கள் மீது ஏவி கொடுமை செய்தது.

1957 இல் சிங்கள அதிபர் பண்டார நாயகா ஈழத்து காந்தி எனப்பட்ட தந்தை செல்வாவோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தையும், 1965 இல் சிங்கள அதிபர் சேனநாயகா, தந்தை செல்வா அவர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் கிழித்துக் குப்பையில் தூக்கிப் போட்டது.

ஈழத்தமிழர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் உரிமை மறுக்கப்பட்டதுடன், சிங்கள அரசின் கொடிய அடக்குமுறைக்கு ஆளானார்கள். எண்ணற்ற தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் நாசமாக்கப்பட்டனர். ஈழத்தில் நடந்த உலகத்தமிழர் மாநாட்டில் 11 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இனி சிங்களவர்களோடு இணைந்து வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்த தந்தை செல்வா அவர்கள் 1975 இல் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு சுதந்திர இறையாண்மையுள்ள தமிழீழம் என்ற இலட்சியத்தை முன்வைத்து காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிட்டார். 90 விழுக்காடு வாக்காளர்கள் ஆதரவுடன் மாபெரும் வெற்றி பெற்றார்.

சிங்கள அரசு ஈழத்தமிழர்களை அடக்கி ஒடுக்கும் போக்கை மாற்றிக் கொள்ளாததால், 1976 மே 14 இல் பண்ணாகம், வட்டுக்கோட்டையில் அனைத்துத் தமிழ் அமைப்புக்களையும் ஒன்றாகத் திரட்டி, இனி சுதந்திர இறையாண்மையுள்ள தமிழீழ தேசம்தான் ஒரே தீர்வாகும். அடுத்து இளைய தலைமுறையினர் இந்த இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லட்டும் என்று பிரகடனம் செய்தார்.

அதன்பின்னரே தமிழீழ இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேதகு பிரபாகரன் அவர்களின் தமிழீழ விடுதலைப் புலிகள் 1975 மே 5 ஆம் தேதி தொடங்கப் பெற்று, சிங்கள இராணுவத்தினரைத் திணறடித்து மாபெரும் சக்தியாக உருவானார்கள்.

1981 இல் யாழ்ப்பாண நூலகத்தை சிங்களக் காடையர்கள் எரித்து ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் நூல்களை சாம்பலாக்கினார்கள்.

1983 இல் வெலிக்கடை சிறையில் சிங்களக் கொலைபாதகர்களை ஏவி 53 ஈழத்தமிழர்களைக் கொடுரமாகக் கொன்றார்கள்.

1987 இல் பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து, டெல்லியில் தலைமை அமைச்சர் ராஜீவ்காந்தி அவர்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை புலிகளின் மீது திணித்தார்கள் அதன்படி ஜூலை 29 இல் கொழும்பில் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

ஆகஸ்டு 4 ஆம் தேதி சுதுமலை பொதுக்கூட்டத்தில் பிரபாகரன் அவர்கள், இந்திய வல்லரசு ஒப்பந்தத்தை தங்கள் மீது திணித்துவிட்டது என்றும், இந்திய அரசோடு மோதுகின்ற எண்ணம் தமக்கு இல்லை என்றும், ஆனால் சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விரைவில் விழுங்கிவிடும் என்றும் ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இனி இந்திய அரசுக்கு இருக்கிறது என்றும் கூறினார்.

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்களின் வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைப்பதற்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற ஒப்பந்தத்தை எதிர்த்து தான் பிரச்சாரம் செய்யப் போவதாக ஒரு மாதத்திற்குள் சிங்கள அதிபர் ஜெயவர்த்தனே ஆணவத்தோடு கூறினார்.

விடுதலைப் புலிகளின் தளபதிகள் 17 பேரை சிங்களக் கடற்படை கைது செய்து, பலாலி விமான நிலையத்தில் அக்டோபர் 5 ஆம் தேதி சிறை வைத்தது. இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளைப் பாதுகாக்க முற்றுகை வளையம் போட்டதை இந்திய அரசு அகற்றச் சொன்னதன் பேரில் சிங்கள இராணுவம் 17 புலிப்படை தளபதிகளையும் தாக்கி கைது செய்ய முனைந்தபோது, குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 தளபதிகள் சயனைடு குப்பிகளைக் கடித்து அக்கணத்திலேயே மாண்டார்கள்.

புலிகளின் தொலைக்காட்சி நிறுவனமும், பத்திரிக்கை அலுவலகங்களும் இந்திய இராணுவத்தால் தகர்க்கப்பட்டன.

தலைவர் பிரபாகரன் அவர்களோடு புலிகள் வன்னிக் காட்டுக்குள் நுழைந்து அங்கிருந்தவா கொரில்லா யுத்தம் நடத்தினர். 3.

இந்திய அமைதிப் படை ஈழத்தமிழர்களைத் தாக்குகின்ற படை ஆயிற்று.

இந்திராகாந்தி அம்மையார் தலைமை அமைச்சராக இருந்தபோது, 1983 லேயே இந்தி நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர்கள்தான் அத்தீவுக்கு பூர்வ குடிமக்கள் என்றும், அங்கு நடப்ப ஈழத்தமிழர் இனப்படுகொலை என்றும் அறிவித்திருந்தார்.

இந்திய இராணுவத்துடன் போர் நிறுத்தம் செய்துகொள்ள வேண்டும் என்று பிரபாகரன் இந்திய பிரதமருக்கு எட்டுக் கடிதங்கள் எழுதினார். அனைத்தும் வீணாயிற்று.

இதன்பின்னர் 1989 இல் வி.பி.சிங் இந்தியப் பிரதமரானவுடன் இலங்கையிலிருந்து இந்தி இராணுவத்தை திரும்பி வரச் செய்தார்.

1990 களில் விடுதலைப் புலிகள் பல போர்க்களங்களில் சிங்கள இராணுவத்தை தோற்கடித்த குறிப்பாக 2000 ஆம் ஆண்டில் யானையிறவு சமர்க்களத்தில் தங்களைவிட 20 மடங்கு பல பலமும், ஆயுத பலமும் கொண்ட சிங்கள இராணுவத்தை புலிகள் தோற்கடித்து, உலகத்தை திகைக்கச் செய்துவிட்டு, 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் தேதி புலிகள் தாங்களாகவே நாட்களுக்கு போர் நிறுத்தம் அறிவித்தனர். மேலும் 30 நாட்களுக்கு போர் நிறுத்தத்தை நீட்டித்தனர்.

இந்தக் கட்டத்தில் நார்வே அரசு இரு தரப்பிலும் பேசி சமாதானம் ஏற்படுத்த முயன்ற தாய்லாந்து, நார்வே, ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்ற சிங்கள அதிபர் சந்திரிக குமாரதுங்கா பேச்சுவார்த்தையைச் சீர்குலைத்தார்.

2006 இல் செஞ்சோலையில் 61 தமிழ்ச் சிறுமிகளை சிங்கள விமானப் படை குண்டு வீச்சி கொன்று குவித்தது. பிரஞ்சு நாடு ஏற்பாடு செய்த சுனாமி நிவாரணப் பணியில் ஈடுபட்டிரு 17 தமிழர்களை குண்டு வீசிக் கொன்றது. தமிழ் நங்கை இசைப்பிரியாவை சிங்கள இராணுவத்தினர் நம் நெஞ்சு நடுங்கத்தக்க வகையில் கூட்டு வன்புணர்ச்சி செய் கொடூரமாகக் கொன்றதை சேனல்-4 தொலைக்காட்சி உலகத்துக்கு அம்பலப்படுத்தியது. எட் ஈழத் தமிழ் தமிழர்கள் கண்கள் கட்டப்பட்டு, நிர்வாண நிலையில் இராணுவத்தா கொல்லப்பட்டதையும் சேனல்-4 சாட்சியமாக உலகுக்குக் காட்டியது.

ஏழு அணு ஆயுத வல்லரசுகளின் இராணுவ உதவியோடு சிங்கள அரசு ஈழத்தமிழர்கள இலட்சக்கணக்கில் கொன்று குவித்தது. பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பெண்க நாசமாக்கப்பட்டு, கொல்லப்பட்டனர். அடால்ப் ஹிட்லருக்குப் பிறகு நடத்தப்பட்ட கோ படுகொலையாக முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழர் படுகொலை நடந்தது.

இதற்கெல்லாம் மேலாக ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் சிங்கள அரசையு ராஜபக்சேவையும் பாராட்டி இந்தியாவும், கியூபாவும் 29 நாடுகளின் ஆதரவுடன் அந் பாராட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்த நாள் முதல் இந்நாள் வரையிலும் முன்னை காங்கிரஸ் அரசும், இன்றைய மோடி அரசும் மனித உரிமைக் கவுன்சிலில் சிங்கள அரசி இனக்கொலையைக் கண்டிக்காமல் அந்த அரசுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தின் முதல்வரான விக்னேஷ்வரன் அவர்கள் தமிழின படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணையை ஐ.நா.மன்றம் நடத்த வேண்டும் என்று தீர்மா நிறைவேற்றினார். தமிழக சட்டமன்றத்தில், சுதந்திரத் தமிழீழத்துக்கான பொதுவாக்கெடு நடத்தப்பட வேண்டும் என்றும், தமிழீழ இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பபட்டது.

1987 ஒப்பந்தத்தில் இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்ற அறிவிப் இலங்கையின் உச்சநீதிமன்றம் இரத்து செய்தபோதும், இந்திய அரசு அதைக் கண்டுகொள்ள இல்லை.

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை இந்திய அரசும், உ நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று வீரத் தியாகி முத்துக்குமார் உள்ளிட்ட 19 தமிழர் தீக்குளித்து மாண்டார்கள்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அர்மீனியாவில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு விசாரணை வேண்டும் என்று ஜெர்மானிய நாடாளுமன்றம் மூன்று ஆண்டுகளுக்கு மு ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

இந்த நானிலத்தில் ஈழத்தமிழர்கள் நாதியற்றுப் போனார்கள்.

இந்நிலையில், ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு அனைத்துலக நாடுகளின் சார் ஐ.நா.மன்றம் நீதி விசாரணை நடத்த வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை மறைக்கவும், சுதந்திர தமிழீழ தேச கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்யவும் இன்றைய சிங் அரசு மறைமுகமாக பின்புலத்தில் செயல்பட்டதால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எ பெயரில் ஒரு அமைப்பு ஈழத்தமிழர்களுக்கு துரோகம் செய்யும் வகையில், தமிழீழ மக்களு சுயாட்சி அதிகாரங்களைத் தர வேண்டும் என்று ஒரு போலி நாடகத்தை நடத்த முனை இந்திய அரசுக்கு, தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும் என்று ஒரு கபட நாடகத்தை நடத் கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னணியை தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களும், இந்திய நாட்டில் உள்ள அரசி கட்சிகளும், உலக நாடுகளும் உணர்ந்து ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கான விசாரணையை நடத்த முன்வர வேண்டும் என்றும், சுதந்திரத் தமிழீழத்துக்கு ஐ. மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், தமிழர் காணிக குடியேற்றப்பட்டுள்ள சிங்கள குடியேற்றங்கள் வெளியேற்றப்பட வேண்டும் என் ஈழத்தமிழர் தாயகத்திலிருந்து சிங்கள இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என் அதற்கான ஆயத்த வேலைகளைச் செய்ய தமிழகத்தில் உள்ள தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும் கடமையாற்ற வேண்டும் என்று இந்தக் கூட்டறிக்கையின் வாயிலாக நாங் வேண்டிக் கொள்கிறோம்.

'தாயகம்'
சென்னை - 8
23.12.2025

**தலைமை நிலையம்**
மறுமலர்ச்சி தி.மு.க.

**(பா. சதீசன்)**

ஈழத் தமிழினப் படுகொலைக்கான சர்வதேச விசாரணை கோரிக்கையை மூடி மறைக்கவும், சுதந்திரத் தமிழீழக் கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்யவும் சிங்கள அரசின் மறைமுக நடவடிக்கைதான் தற்போதைய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கை என்று வைகோ உட்பட ஈழத் தமிழ் ஆதரவாளர்கள் குழுவினர் காட்டமான அறிக்கை ஒன்றை தமிழகத்தில் விடுத்திருக்கின்றார்கள்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, திராவிட தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை இராமகிருஷ்ணன்,

மே-17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் தியாகு, தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் தலைவர் மணியரசன், விடுதலை தமிழ்ப் புலிகள் குடந்தை அரசன், தற்சார்பு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் ஈரோடு வே.பொன்னையன், இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், தமிழ்ப் புலிகள் கட்சி நாகை திருவள்ளுவன், எஸ்.டி.பி.ஐ. கட்சித் தலைவர் நெல்லை முபாரக், மனிதநேய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் தமிமுன் அன்சாரி, முக்குலத்தோர் புலிப்படையின் கருணாஸ் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சி தி.மு.கவின்'தாயகம்' தலைமை நிலையத்திலிருந்து வெளியான அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

வரலாற்றின் வைகறை காலத்திலிருந்து தனிக் கொற்றம் அமைத்து, ஈழத்தமிழர்களின் வரலாற்றில் போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், பின்னர் பிரித்தானியர்கள் தனித்தனி அரசுகளாக இருந்த ஈழத்தமிழர் தேசத்தையும், சிங்கள தேசத்தையும் நிர்வாக வசதிக்காக ஒரே நாடாக்கி, பிரித்தானியர்கள் 1948 பெப்ரவரியில் வெளியேறியபோது, சிங்களர்களின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை தந்ததால் ஈழத்தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்கள் ஆக்கப்பட்டனர்.

ஈழத்தமிழர்கள் தந்தை செல்வா தலைமையில் அடிப்படை உரிமைகளுக்காக அறப்போர் நடத்தியபோது, காவல் துறை, இராணுவத்தை சிங்கள அரசு ஈழத்தமிழர்கள் மீது ஏவி கொடுமை செய்தது.

1957 இல் சிங்கள அதிபர் பண்டா நாயக்கா ஈழத்து காந்தி எனப்பட்ட தந்தை செல்வாவோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தையும், 1965 இல் சிங்கள அதிபர் சேன நாயகா, தந்தை செல்வா அவர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் கிழித்துக் குப்பையில் தூக்கிப் போட்டனர்.

ஈழத்தமிழர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் உரிமை மறுக்கப்பட்டதுடன், சிங்கள அரசின் கொடிய அடக்குமுறைக்கு ஆளானார்கள். எண்ணற்ற தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் நாசமாக்கப்பட்டனர். ஈழத்தில் நடந்த உலகத்தமிழர் மாநாட்டில் 11 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இனி சிங்களவர்களோடு இணைந்து வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்த தந்தை செல்வா அவர்கள் 1975 இல் தனது நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு சுதந்திர இறையாண்மையுள்ள தமிழீழம் என்ற இலட்சியத்தை முன்வைத்து காங்கேசன்துறை இடைத் தேர்தலில் போட்டியிட்டார். 90 விழுக்காடு வாக்காளர்கள் ஆதரவுடன் மாபெரும் வெற்றி பெற்றார்.

சிங்கள அரசு ஈழத்தமிழர்களை அடக்கி ஒடுக்கும் போக்கை மாற்றிக் கொள்ளாததால், 1976 மே 14 இல் பண்ணாகம், வட்டுக்கோட்டையில் அனைத்துத் தமிழ் அமைப்புக்களையும் ஒன்றாகத் திரட்டி, இனி சுதந்திர இறையாண்மையுள்ள தமிழீழ தேசம்தான் ஒரே தீர்வாகும், அடுத்து இளைய தலைமுறையினர் இந்த இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லட்டும் என்று பிரகடனம் செய்தார்.

அதன் பின்னரே தமிழீழ இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேதகு பிரபாகரன் அவர்களின் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 1975 மே 5 ஆம் தேதி தொடங்கப் பெற்று, சிங்கள இராணுவத்தினரைத் திணறடித்து மாபெரும் சக்தியாக உருவானார்கள்.

1981 இல் யாழ்ப்பாண நூலகத்தை சிங்களக் காடையர்கள் எரித்து ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் நூல்களை

தொடர்ச்சி ▼

# சிங்கள அரசினுடைய மறைமுக நடவடிக்கைதான் சைக்கிள் அணியினரின் தமிழக கபட நாடகங்கள்

**தொடர்ச்சி▲**

சாம்பலாக்கினார்கள்.

1983 இல் வெலிக்கடை சிறையில் சிங்களக் கொலைபாதகர்களை ஏவி 53 ஈழத்தமிழர்களைக் கொடூரமாகக் கொன்றார்கள்.

1987 இல் பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து, டெல்லியில் தலைமை அமைச்சர் ராஜீவ்காந்தி அவர்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை புலிகளின் மீது திணித்தார்கள். அதன்படி ஜூலை 29 இல் கொழும்பில் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

ஆகஸ்டு 4 ஆம் தேதி சுதுமலை பொதுக்கூட்டத்தில் பிரபாகரன் அவர்கள், இந்திய வல்லரசு ஒப்பந்தத்தை தங்கள் மீது திணித்துவிட்டது என்றும், இந்திய அரசோடு மோதுகின்ற எண்ணம் தமக்கு இல்லை என்றும், ஆனால் சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விரைவில் விழுங்கிவிடும் என்றும் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இனி இந்திய அரசுக்கு இருக்கிறது என்றும் கூறினார்.

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்களின் வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைப்பதற்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற ஒப்பந்தத்தை எதிர்த்துத் தான் பிரச்சாரம் செய்யப் போவதாக ஒரு மாதத்திற்குள் சிங்கள அதிபர் ஜெயவர்த்தனே ஆணவத்தோடு கூறினார்.

விடுதலைப் புலிகளின் தளபதிகள் 17 பேரை சிங்களக் கடற்படை கைது செய்து, பலாலி விமான நிலையத்தில் அக்டோபர் 5 ஆம் தேதி சிறை வைத்தது. இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளைப் பாதுகாக்க முற்றுகை வளையம் போட்டதை இந்திய அரசு அகற்றச் சொன்னதன் பேரில் சிங்கள இராணுவம் 17 புலிப்படை தளபதிகளையும் தாக்கி கைது செய்ய முனைந்தபோது, குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 தளபதிகள் சயனைடு குப்பிகளைக் கடித்து அக்கணத்திலேயே மாண்டார்கள்.

புலிகளின் தொலைக்காட்சி நிறுவனமும், பத்திரிக்கை அலுவலகங்களும் இந்திய இராணுவத்தால் தகர்க்கப்பட்டன.

தலைவர் பிரபாகரன் அவர்களோடு புலிகள் வன்னிக் காட்டுக்குள் நுழைந்து அங்கிருந்தவாறு கொரில்லா யுத்தம் நடத்தினர்.

இந்திய அமைதிப் படை ஈழத்தமிழர்களைத் தாக்குகின்ற படை ஆயிற்று.

இந்திராகாந்தி அம்மையார் தலைமை அமைச்சராக இருந்தபோது, 1983 லேயே இந்திய நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர்கள்தான் அத்தீவுக்கு பூர்வ குடிமக்கள் என்றும், அங்கு நடப்பது ஈழத்தமிழர் இனப்படுகொலை என்றும் அறிவித்திருந்தார்.

இந்திய இராணுவத்துடன் போர் நிறுத்தம் செய்துகொள்ள வேண்டும் என்று பிரபாகரன் இந்தியப் பிரதமருக்கு எட்டுக் கடிதங்கள் எழுதினார். அனைத்தும் வீணாயிற்று.

இதன்பின்னர் 1989 இல் வி.பி.சிங் இந்தியப் பிரதமரானவுடன் இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தை திரும்பி வரச் செய்தார்.

1990 களில் விடுதலைப் புலிகள் பல போர்க்களங்களில் சிங்கள இராணுவத்தை தோற்கடித்தனர். குறிப்பாக 2000 ஆம் ஆண்டில் யானையிறவு சமர்க்களத்தில் தங்களைவிட 20 மடங்கு படை பலமும், ஆயுத பலமும் கொண்ட சிங்கள இராணுவத்தை புலிகள் தோற்கடித்து, உலகைத் திகைக்கச் செய்துவிட்டு,

2000 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் தேதி புலிகள் தாங்களாகவே 30 நாள்களுக்கு போர் நிறுத்தம் அறிவித்தனர். மேலும் 30 நாள்களுக்கு போர் நிறுத்தத்தை நீட்டித்தனர்.

இந்தக் கட்டத்தில் நோர்வே அரசு இரு தரப்பிலும் பேசி சமாதானம் ஏற்படுத்த முயன்றது. தாய்லாந்து, நோர்வே, ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. சிங்கள அதிபர் சந்திரிக குமாரதுங்கா பேச்சுவார்த்தையைச் சீர்குலைத்தார்.

2006 இல் செஞ்சோலையில் 61 தமிழ்ச் சிறுமிகளை சிங்கள விமானப் படை குண்டு வீச்சில் கொன்று குவித்தது. பிரஞ்சு நாடு ஏற்பாடு செய்த சுனாமி நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த 17 தமிழர்களை குண்டு வீசிக் கொன்றது. தமிழ் நங்கை இசைப்பிரியாவை சிங்கள இராணுவத்தினர் நம் நெஞ்சு நடுங்கத்தக்க வகையில் கூட்டு வன்புணர்ச்சி செய்து, கொடூரமாகக் கொன்றதை சேனல்-4 தொலைக்காட்சி உலகத்துக்கு அம்பலப்படுத்தியது. எட்டு ஈழத் தமிழ் தமிழர்கள் கண்கள் கட்டப்பட்டு, நிர்வாண நிலையில் இராணுவத்தால் கொல்லப்பட்டதையும் சேனல்-4 சாட்சியமாக உலகுக்குக் காட்டியது.

ஏழு அணு ஆயுத வல்லரசுகளின் இராணுவ உதவியோடு சிங்கள அரசு ஈழத்தமிழர்களை இலட்சக்கணக்கில் கொன்று குவித்தது. பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் நாசமாக்கப்பட்டு, கொல்லப்பட்டனர். அடால்ப் ஹிட்லருக்குப் பிறகு நடத்தப்பட்ட கோரப் படுகொலையாக முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழர் படுகொலை நடந்தது.

இதற்கெல்லாம் மேலாக ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸ்க்லில் சிங்கள அரசையும், ராஜபக்ஷவையும் பாராட்டி இந்தியாவும், கியூபாவும் 29 நாடுகளின் ஆதரவுடன் அந்தப் பாராட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்த நாள் முதல் இந்நாள் வரையிலும் முன்னைய காங்கிரஸ் அரசும், இன்றைய மோடி அரசும் மனித உரிமைக் கவுன்சிலில் சிங்கள அரசின் இனக்கொலையைக் கண்டிக்காமல் அந்த அரசுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தின் முதல்வரான விக்னேஸ்வரன் அவர்கள் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணையை ஐ.நா.மன்றம் நடத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார். தமிழக சட்டமன்றத்தில், சுதந்திரத் தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், தமிழீழ இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பபட்டது.

1987 ஒப்பந்தத்தில் இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்ற அறிவிப்பை இலங்கையின் உச்ச நீதிமன்றம் இரத்து செய்தபோதும், இந்திய அரசு அதைக் கண்டுகொள்ளவே இல்லை.

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை இந்திய அரசும், உலக நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று வீரத் தியாகி முத்துக்குமார் உள்ளிட்ட 19 தமிழர்கள் தீக்குளித்து மாண்டார்கள்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அர்மீனியாவில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு நீதி விசாரணை வேண்டும் என்று ஜெர்மானிய நாடாளுமன்றம் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

இந்த நானிலத்தில் ஈழத்தமிழர்கள் நாதியற்றுப் போனார்கள்.

இந்நிலையில், ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு அனைத்துலக நாடுகளின் சார்பாக ஐ.நா.மன்றம் நீதி விசாரணை நடத்த வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை மூடி மறைக்கவும், சுதந்திர தமிழீழ தேச கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்யவும் இன்றைய சிங்கள அரசு மறைமுகமாக பின்புலத்தில் செயல்பட்டதால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் ஒரு அமைப்பு ஈழத்தமிழர்களுக்கு துரோகம் செய்யும் வகையில், தமிழீழ மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்களைத் தர வேண்டும் என்று ஒரு போலி நாடகத்தை நடத்த முனைந்து, இந்திய அரசுக்கு, தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும் என்று ஒரு கபட நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னணியை தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களும், இந்திய நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும், உலக நாடுகளும் உணர்ந்து ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கான நீதி விசாரணையை நடத்த முன்வர வேண்டும் என்றும், சுதந்திரத் தமிழீழத்துக்கு ஐ.நா. மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், தமிழர் காணிகளில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள குடியேற்றங்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றும், ஈழத்தமிழர் தாயகத்திலிருந்து சிங்கள இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் அதற்கான ஆயத்த வேலைகளைச் செய்ய தமிழகத்தில் உள்ள தமிழர்களும், புலம்பெயர் வாழ் தமிழர்களும் கடமையாற்ற வேண்டும் என்று இந்தக் கூட்டறிக்கையின் வாயிலாக நாங்கள் வேண்டிக் கொள்கிறோம். - என்று உள்ளது."

# அக்கரபத்தனை வரவு - செலவுத் திட்டம் மீளச் சமர்ப்பித்தபோது நிறைவேறியது










(மஸ்கெலியா நிருபர்)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வசம் உள்ள அக்கரபத்தனை பிரதேச சபையில், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று முன்தினம் இரண்டாவது முறையாக சபையில் சமர்பிக்கப்பட்ட போது அது நிறைவேற்றப்பட்டது

சபையின் வரவு - செலவுத் திட்டம் கடந்த கூட்ட அமர்வின் போது சமர்பிக்கப்பட்ட போது தோல்வி அடைந்த நிலையில் மீண்டும் வரவு - செலவுத் திட்டத்திற்கான கூட்டம் நேற்று முன்தினம் சபை தவிசாளர் சத்தியமூர்த்தி ரதிதேவி தலைமையில் அக்கரப்பத்தனை பிரதேச சபை காரியாலயத்தில் நடைபெற்றது.

வரவு - செலவு திட்டம் 08 வாக்குகளின் ஆதரவோடு வெற்றி அடைந்தது. அமர்வில் 14 பேர் கலந்து கொண்டிருந்தனர். ஐக்கிய தேசிய கட்சியை ஒருவரும், ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் ஒருவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு பேரும் என மொத்தம் ஆறு பேர் வாக்களிப்பின் போது வெளிநடப்புச் செய்தனர்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வாக்கெடுப்பில் 08 பேர் ஆதரவாக வாக்களித்தமையால் வரவு - செலவு திட்டம் வெற்றிப்பெற்றது.

சபை தவிசாளர் கருத்து வெளியிடுகையில் -

இச்சபை கடந்த காலங்களிலும் தற்போதும் வருமானம் மிகவும் குறைந்ததாகவே இருக்கின்றது. எதிர்காலத்தில் பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான நிதிப்பலத்தை பெற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளோம். அத்தோடு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருடனும் இது தொடர்பாகக் கலந்துரையாடி இருக்கின்றோம். இச்சபையில் வளங்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. பெரும் எண்ணிக்கையான மக்கள் வாழும் பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதாக இருந்தால் தேவையான வளங்களும் நிதி வளமும் இருக்க வேண்டும். இதனை ஏற்படுத்துவதற்கு சகல உறுப்பினர்களும் முழுப் பங்களிப்பை வழங்க வேண்டும். சபையில் கட்சி வேறுபாடுகள் இன்றி சகல விடயங்களையும் நாங்கள் நேர்மையாக முன்னெடுக்கின்றோம். இயற்கை அனர்த்தத்தால் பாரிய சேதங்கள் ஏற்பட்டன. சபையின் ஊடாக செய்ய வேண்டிய அனைத்து விடயங்களையும் முன்னெடுத்து வருகின்றோம். நிவாரண உதவி மற்றும் பாதிக்கப்பட்ட வீதிகளை சீர்திருத்தம் செய்து மீண்டும் மக்களுக்குப் பாதுகாப்பான போக்குவரத்து நடவடிக்கையை எடுப்பதற்கான பணிகளும் தற்போது இடம் பெற்று வருகின்றன. எனவே எதிர்காலத்திலும் மக்களுக்கு செய்ய வேண்டிய அனைத்து பணிகளும் முறையாக இடம்பெறும். - எனக் குறிப்பிட்டார்.

# கற்பிட்டியில் நிவாரணப் பணி பகிஷ்கரிப்பை கிராம, அபிவிருத்தி அலுவலர்கள் விலக்கினர்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுகளில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடம்பெற்று வந்த கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அனர்த்தத நிவாரண வேலைத்திட்ட தற்கால பணி விலகல் நேற்று முன்தினம் திங்கட்கிழமையுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மீதான தாக்குதல்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மீதான அச்சுறுத்தல்களை அடுத்து மேற்படி பணி விலகல் முடிவில் அவர்கள் குதித்திருந்தனர்.

கற்பிட்டி பிரதேச செயலாளருடன் இடம்பெற்ற பேச்சுகளை அடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை முதல் கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் அனர்த்த நிவாரண வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு தீர்மானித்து அரசின் நிவாரண நிதி கொடுப்பனவு மற்றும் உலர் உணவு பொதிகள் வழங்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.









# மன்னாரில் வறிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிய இராணுவம்

**(மன்னார் நிருபர்)**

வசதி குறைந்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு – இராணுவத்தின் 54 ஆவது காலாட்படை பிரிவு ஏற்பாடு செய்த –

அவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

கற்றல் உபகரணங்கள் வழங்கும் இந்த நிகழ்வில் சாந்திபுரம் ஆரம்ப பாடசாலை, மன்னார் அலாவுதீன் பாடசாலை மற்றும் மன்னார் நகர சபை சுத்திகரிப்பு பாணியாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளடங்கலாக 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக இராணுவத்தின் 54 ஆவது காலாட்படை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர அபயகோன், இராணுவத்தின் 543 வது காலட் படைப்பிரிவின் தளபதி மூத்த அதிகாரி றமித்து ஹசந்த,சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்ற வைத்தியர் ஜினஞ்சலாசாணிக்கா விஜே குணசேகர மற்றும் அவரது மகள் வைத்தியர் தெருசி தில்ஹாரா பெரேரா, மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.பாடசாலைகளுக்கான அன்பளிப்புக்கள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.













# பருத்தித்துறை நகரபிதாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உழியர்கள் கௌரவிப்பு, மதியபோசன விருந்து நிகழ்வு

வருட இறுதி மற்றும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு பருத்தித்துறை நகர பிதாவின் ஏற்பாட்டில் நகரசபை உழியர்கள், உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வு மற்றும் மதியபோசன விருந்து நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நகரபிதா டக்ளஸ் போல் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது நகரசபையின் முன்களப் பணியாளர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. நகரபிதாவின் வழிகாட்டுதலில் வின்சென் டீ போல் (பிரைவேட்) லிமிடெட் இந்த சீருடைகளுக்கான அனுசரணை வழங்கியிருந்தது.

அன்ரன் ஜெயக்குமார் ஜொனிஸ் மற்றும் வின்சென் டீ போல் (பிறைவேட்) லிமிடெட் அனுசரணையில் நகரசபையின் முன்களப் பணியாளர்களின் பிள்ளைகளான பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போலின் தனிப்பட்ட நிதி பங்களிப்பில், டித்வா புயல் அனர்த்தத்தின் போது கடந்த 28, 29 ஆகிய நாள்களில் தன்னலம் கருதாது அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய நகரசபையின் முன்களப் பணியாளர்யாளர்கள் மற்றும் விடுமுறை நேரத்திலும் அலுவலகப் பணியினை ஆற்றியிருந்த உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

நகரசபையின் முன்களப் பணியாளர்களுக்கு வருட இறுதி மதியபோசன விருந்தும் வழங்கிவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், முன்களப் பணியாளர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.





















# மதுபோதையில் வாகனம் ஓட்ட வேண்டாம்: பொலிஸாருக்கு வந்தது புதிய கருவிகள்

மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை அடையாளம் காண பயன்படுத்தப்படும் சாதனங்கள் தற்போது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று முதல் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அல்கோலைசர் (alcolizer) சாதனங்கள் அனுப்பப்படும் என்று போக்குவரத்து தலைமையக பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிட்டத்தட்ட 80,000 அல்கோலைசர் சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கொள்முதல் செயல்முறைக்குப் பின்னர்நாடுமுழுவதும்உள்ளபொலிஸ்நிலையங்களுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# விமான நிலையத்தில் சேவைகளை விரிவுபடுத்திய மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கிளை




கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேசவிமானநிலையத்தில்இயங்கும்மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கிளை அலுவலகம், இலங்கைப் பிரஜைகள் மற்றும் இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கான சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.

இதற்கமைய வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரங்களைக் கொண்டுள்ளவர்கள், இலங்கையில் வாகனங்களை ஓட்டுவதற்கு அவசியமான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளும் வசதி இதுவரை வெரஹெர அலுவலகத்தில் மாத்திரமே பிரதானமாக வழங்கப்பட்டு வந்தது.

கடந்த 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அலுவலகம், ஆரம்பத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரமே சேவைகளை வழங்கி வந்தது.

இதன்படி தற்போது இந்தச் சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளதன் மூலம் வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரம் வைத்துள்ள இலங்கைப் பிரஜைகள், இரட்டைக் குடியுரிமை கொண்ட இலங்கையர்கள் ஆகியோர் விமான நிலையத்திலேயே தமது தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2025 நவம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட 2463/04ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், திருத்தப்பட்ட மோட்டார் வாகனக் கட்டண விதிகளுக்கு உட்பட்டு, இதற்கான கட்டணங்கள் அறவிடப்படும்.

தற்போது வெரஹெர மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய அலுவலகங்களில் மாத்திரம் கிடைக்கும் இந்த சேவை, எதிர்காலத்தில் மாவட்ட அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் கொழும்பு வரை செல்லாமல் விமான நிலையத்திலேயே தமக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.




# அரசமைப்புக்கு இணங்க கணக்காய்வாளர் நாயகத்தை உடன் நியமிக்க சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

அரசமைப்புக்கு இணங்க நிரந்தரக் கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், அரச நிதிப் பயன்பாட்டில் வெளிப்படைத் தன்மையைப் பேணவும் சர்வதேச ரீதியில் நாட்டின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தவும் இந்த நியமனம் மிகவும் அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் கடந்த ஏப்ரல் மாதம் ஓய்வு பெற்றதன் பின்னர், இதுவரை நிரந்தர அதிகாரி ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படாமை குறித்துச் சட்டத்தரணிகள் சங்கம் தனது கவலையை வெளியிட்டுள்ளது.

அத்துடன், அரசமைப்பின் 153டு உறுப்புரையின்படி அரச நிறுவனங்களின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் முதன்மையான பொறுப்பு இந்த பதவிக்கு உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பி வருவதுடன், "டித்வா" சூறாவளி அனர்த்த நிவாரணங்களுக்காகப் பெருமளவிலான வெளிநாட்டு நிதியுதவிகள் நாட்டுக்குக் கிடைத்து வருகின்றன.

இத்தகைய இக்கட்டான சூழலில் நிதி வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியமானது என்பதால், அரசியல் சார்பற்ற, துறையில் நிபுணத்துவமும் சுதந்திரமும் கொண்ட ஒருவரை அரசமைப்பு பேரவையின் இணக்கப்பாட்டுடன் உடனடியாக நியமிக்குமாறு சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய மற்றும் செயலாளர் சதுர கல்ஹேன ஆகியோர் கையொப்பமிட்ட அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள்



பண்டிகை காலத்தை முன்னிட்டு நேற்று நள்ளிரவு முதல் விசேட போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதற்காக மேலதிக 80 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான செயற்பாட்டு அதிகாரி சங்க வீரசூரிய தெரிவித்துள்ளார்.

# கடிகாரத்தில் நேரத்தை மாற்றி நிறைவேற்றப்பட்ட ஹொரணை நகர சபையின் வரவு - செலவு திட்டம்

## தேசிய மக்கள் சக்தி மீது குற்றச்சாட்டு




ஹொரணை நகர சபையின் வரவு – செலவு திட்டத்தை நிறைவேற்றும் போது, சபையின் கடிகார நேரத்தை வேண்டுமென்றே மாற்றி அமைத்து முறைகேடாக செயற்பட்டதாகத் தேசிய மக்கள் சக்தி மீது எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஹொரணை நகர சபைக் கூட்டத்தில், ஆளும் கட்சியினருக்குப் பெரும்பான்மை இல்லாத நிலையிலும், மிகவும் மோசடியான முறையில் வரவு- செலவு திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரி வித்துள்ளார்.

சபைக் கூட்டம் உத்தியோகபூர்வமாக காலை 10:00 மணிக்குத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், சபை மண்டபத்திலிருந்த கடிகாரத்தை 5 நிமிடங்கள் முன்னோக்கித் திருப்பி வைத்துவிட்டு, 9:55 மணிக்கே வரவு- செலவு திட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டதாக அஜித் பி.பெரேரா குற்றம் சுமத்தினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரியான நேரமான காலை 10:00 மணிக்கு சபைக்கு வந்தபோது, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் வாக்குகளுடன் வரவு- செலவு திட்டம்நிறைவேற்றப்பட்டு, அவர்கள் சபையை விட்டு வெளியேறியிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

நடைமுறைகள் மீறப்பட்டதா? அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி, கூட்டத்தின் ஆரம்பத்தில் சமய வழிபாடுகள், மறைந்த உறுப்பினர்களுக்கான அஞ்சலி மற்றும் முந்தைய கூட்டத்தின் நிமிடங்களை உறுதிப்படுத்துதல் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஆனால், எவ்வித மத வழிபாடுகளுமின்றி வெறும் 3 நிமிடங்களுக்குள் முழு வரவு- செலவு திட்டம் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த சட்டவிரோத செயலுக்கு நகர சபைச் செயலாளரும் ஒத்துழைத்துள்ளதாக சுட்டிக்காட்டிய அஜித் பி. பெரேரா, இது அதிகார துஷ்பிரயோகம் என குறிப்பிட்டுள்ளார்.

இது தற்காலிகமான ஒரு அரசியல் வெற்றியாக இருக்கலாம், ஆனால் இத்தகைய தந்திரங்கள் நீண்ட காலத்திற்குப் பலன் தராது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அத்துடன் இதேபோன்ற முறைகேடுகள் கொழும்பு மாநகர சபையிலும் நடைபெறுமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி இதுவரை எவ்வித அதிகாரப்பூர்வ விளக்கமும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் வதிவிடங்களில் மாற்றம் ஏற்பட்டால் அறிவிக்கவும்




இந்த வருடம் பிற்போடப்பட்டுள்ள கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான பாடங்களுக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது வதிவிடங்களில் மாற்றம் ஏற்பட்டிருந்தால் உடனடியாக அறிவிக்குமாறு பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமது பாடசாலை அதிபர் அல்லது பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்தார்.

அனர்த்த நிலைமைகளால் இடம்பெயர்ந்து ஏற்கனவே பரீட்சைக்கு தோற்றிய பாடசாலையில் மீண்டும் தோற்ற முடியாத நிலைமை காணப்படும் பரீட்சார்த்திகள் உரிய காலத்திற்குள் அது குறித்து அறிவித்தால் வேறு பரீட்சை மத்திய நிலையங்களில் தோற்றுவதற்கான வசதியை ஏற்படுத்திக்கொடுக்க முடியும் என அவர் கூறினார்.

0112 784 537 மற்றும் 0112 788 616 என்ற எண்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி பரீட்சை திணைக்களத்திற்கு இது தொடர்பில் அறிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அல்லது தேசிய அடையாள அட்டைகள் அனர்த்தம் காரணமாக அழிவடைந்திருந்தால் அவர்கள் உடனடியாக அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அனுமதி அட்டைகள் காணாமல் போயிருந்தால் அல்லது அழிவடைந்திருந்தால் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அதனை பதிவிறக்கம் செய்ய முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அடையாள அட்டைகள் காணாமல் போயிருந்தால் அல்லது அழிவடைந்திருந்தால் தபால் அடையாள அட்டைக்கான அளவில் எடுக்கப்பட்ட 02 படங்களை உறுதிப்படுத்தி, அடையாள அட்டைக்கு பதிலாக சமர்ப்பிக்க முடியும் என அவர் கூறினார்.

பாடசாலை பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் மூலம் இதனை உறுதிப்படுத்த முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.




# வரும் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் சாவகச்சேரி நகர சபையில் நிறைவேறியது

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகர சபையின் 2026-ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் மூவர் அதனை எதிர்க்க, ஏனைய அனைவரும் அதற்கு ஆதரவளித்த நிலையில், 11 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்திற்கான அங்கீகாரம் வழங்கும் நிகழ்வில் தமிழரசு கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஆகியோர் ஆதரவளித்த நிலையிலேயே அது நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

2026ஆம் ஆண்டிற்கான இத்திட்டம் 204.5 மில்லியன் ரூபா உத்தேச வருமானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் 374,000 தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம்



இலங்கையைத் தாக்கிய "டித்ட்வா" சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக, சுமார் 374,000 தொழிலாளர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த இயற்கை அனர்த்தத்தினால் தொழிலாளர்களுக்கு மாதத்திற்கு சுமார் 48 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான இழப்பு ஏற்படக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் விவசாயம் மற்றும் கடற்றொழில் துறை முடங்கியுள்ளதாகவும், மலையகத்தில் தேயிலைத் தோட்டப் பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவுகளால் பெருமளவிலான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் விவசாயம் மற்றும் கடற்றொழில்துறை மிக மோசமான பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர் எனவும் சுமார் 23 சதவீத நெற்பயிர் நிலங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தேயிலை உற்பத்தியில் 35 சதவீதம் வரை இழப்பு ஏற்படக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தேயிலை உற்பத்தியில் 70 சதவீத பங்களிப்பை வழங்கும் சிறு தோட்ட உரிமையாளர்களே இதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச தொழிலாளர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இவ்வாறான அனர்த்தங்களின் போது தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய கொள்கைகளில் மாற்றங்களை செய்ய வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.




# தையிட்டியில் பொலிஸாரின் சித்திரவதை; தவிசாளர் நிரோஷ் வைத்தியசாலையில்!

யாழ். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற அஹிம்சை வழி அமைதிப் போராட்டத்தில் ஈடுப்பட்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட போராட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் பொலிஸாரால் கடும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டே கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான வேலன் சுவாமிகள் ஏற்கனவே யாழ். போதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆண்கள் விடுதி 9 இல் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்நிலையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் 24 ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# தேவையான லிட்ரோ எரிவாயு கொள்கலன்களை கொள்வனவு செய்ய அமைச்சரவை அங்கீகாரம்




லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்குத் தேவையான புதிய எரிவாயு கொள்கலன்களைக் கொள்வனவு செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டின் உள்நாட்டு எரிவாயு விநியோகத்தைத் தடையின்றி முன்னெடுக்க ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி 2025ஆம் ஆண்டு முதல் 2027ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்காக, வால்வு பொருத்தப்படாத 4 வெவ்வேறு அளவிலான வெற்று எரிவாயு கொள்கலன்களை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இலங்கை தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து சர்வதேச ரீதியில் போட்டி விலைமனுக் கோரப்பட்டது.

இதன்படி பெறப்பட்ட 4 விலைமனுக்களை மதிப்பீடு செய்த உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழு, குறைந்தபட்ச விலையை முன்வைத்த M/s Sahamitr Metal Pressure Containers Public Co. Ltd என்ற நிறுவனத்தைப் பரிந்துரைத்தது.

இந்தக் கொள்வனவின் கீழ், 2.3 கிலோகிராம் எடை கொண்ட 120,000 கொள்கலன்கள், 5.0 கிலோகிராம் எடை கொண்ட 185,000 கொள்கலன்கள், 12.5 கிலோகிராம் எடை கொண்ட 450,000 கொள்கலன்கள், 37.5 கிலோகிராம் எடை கொண்ட 7,000 கொள்கலன்கள், என மொத்தமாக 7 இலட்சத்து 62 ஆயிரம் கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை தற்போது முறையான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

# இந்திய அரசமைப்பை முழுமையாக அப்புறப்படுத்துவதற்கு பா.ஜ.க. முயற்சி

## பெர்லினில் ராகுல் காந்தி உரை




ஜேர்மனி சென்ற மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி அதன் தலைநகர் பெர்லினில் உள்ள ஹெர்டி பாடசாலையில் பேசுகையில், பா.ஜ.க. இந்திய அரசமைப்பை முழுமையாக அப் புறப்படுத்த முயற்சிப்பதாகக் கூறியமை சர்ச்சையாகியுள்ளது.

பெர்லின் நகரின் ஹெர்டி பாடசாலை யில், மாணவர்கள் மத்தியில் சுமார் 1 மணி நேரம் ராகுல் காந்தி பேசிய காணொலியை காங்கிரஸ் கட்சி அதன் அதிகாரபூர்வ சமூக வலைதளப் பக்கங்களில் பகிர்ந்துள்ளது.

அந்த காணொலியில் ராகுல் காந்தி உரையாற்றுகையில்,

“இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் பல்வேறு விஷயங்களை உள்ளடக்கிய ஜனநாயகம் இந்த உலகுக்கே ஒரு சொத்து எனலாம். அப்படியிருக்க இந்திய ஜன நாயக அமைப்பு மீதான தாக்குதல் சர்வ தேச ஜனநாயகத்தின் மீதான தாக்கு தலாகும்.

பா.ஜ.க. அடிப்படையில் என்ன செய்ய விழைகிறது என்றால், இந்திய அரச மைப்பை முற்றிலுமாக அப்புறப்படுத்த முயற்சிக்கிறது. மாநிலங்களுக்கு இடை யேயான சமத்துவத்தை அழிக்க நினைக் கிறது. மொழிகள், மதங்களுக்கு இடையே யான சமத்துவத்தை ஒழிக்க நினைக்கி றது. இந்திய அரசமைப்பின் மையப் புள்ளியை சிதைக்க நினைக்கிறது.

ஜனநாயக அமைப்பின் மீது தாக்கு தல் நடைபெறும்போது எதிர்க்கட்சிகள், தேர்தலில் ஏதோ சிக்கல் இருக்கிறது என்று சொல்வதோடு நிறுத்திவிடாமல், அதை எதிர்க்க சில வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டியுள்ளது.

அந்தவகையில், ஜனநாயக அமைப்பை தாக்குவோரை நாங்கள் எதிர்கொள்வோம். அதற்காக ஒரு வழியை நாங்கள் உருவாக்குவோம். எதிர்க்கட்சி களின் இந்த உத்தி நிச்சயம் வெற்றி பெறும். நாங்கள் பா.ஜ.கவுக்கு எதிராகப் போராடவில்லை நாங்கள் இந்தியாவின் கட்டமைப்பை கைப்பற்றும் அவர்களின் போக்கை மட்டுமே எதிர்க்கிறோம்.

அடிப்படையில், இந்தியாவின் தேர்தல் நடைமுறைகளில் சிக்கல் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். இரண்டாவதாக, அரசு கட்டமைப்பு ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கூறுகிறோம். அரசு கட்டமைப்புகளை ஆயுதமாக்கும் முயற்சி நடக்கிறது. இதனால், அரசு கட்ட மைப்புகள் என்ன மாதிரியான பணிக ளைச் செய்ய வேண்டுமோ அவைக ளால் அதைச் செய்ய இயலவில்லை.

ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய ஒன் றியத்தை கட்டமைக்க போராடிக் கொண் டிருந்த வேளையில், 1947 இல் இந்தியா தனது அரசமைப்பின் அடிப்படையில் பொருளாதார, அரசியல் ஒன்றியத்தை கட்டமைத்திருந்தது.

அதனால், நீங்கள் எப்போது இந்த புவியின் ஜனநாயக நாடு பற்றிப் பேசினா லும் சரி, இந்த உலகின் மிகப்பெரிய, பல் வேறு விஷயங்களையும் உள்ளடக்கிய இந்திய ஜனநாயகத்தைப் புறந்தள்ளிவிட் டுப் பேச முடியாது. இந்திய ஜனநாயகம் வெறும் இந்தியாவின் சொத்து மட்டுமல்ல அது உலகின் சொத்து. அதனால் தான், இந்திய ஜனநாயகத்தின் மீதான தாக்கு தல், உலக ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என நான் கூறுகிறேன்.

ஹரியானா, மகாராஷ்டிரா தேர்தல் கள் நியாயமாக நடந்ததாக நான் உணர வில்லை. சி.பி.ஐ, அமுலாக்கத் துறை போன்ற அமைப்புகளை காங்கிரஸ் உருவாக்கியது. அதற்காக அவற்றை தன்னுடைய ஏவலுக்கானது என்று கருத வில்லை. அந்த அமைப்புகள் தேசத் துக்கானவை என்பதை உணர்ந்திருக் கிறது. ஆனால், பா.ஜ.க. அந்த அமைப் புகளை தனது சொந்த அமைப்புகளாகப் பார்க்கிறது. அதனால் தான் அவற்றைக் கொண்டு தங்கள் அரசியல் அதிகா ரத்தை வலுப்படுத்த முயற்சிக்கின்றது. சி.பி.ஐ, அமுலாக்கத் துறை அரசு ஆயு தங்களாகிவிட்டன. அவை குறிவைக் கும் பா.ஜ.க. மற்றும் எதிர்க்கட்சியினர் எண்ணிக்கையைக் கொண்டே அதை உறுதிப்படுத்திவிடலாம். இந்த அமைப் புகளின் வழக்குகள் எல்லாமே அரசி யல் சாயம் கொண்டவையாக உள்ளன. அதுமட்டுமல்லாது இந்தியப் பொருளாதா ரத்தை சிக்கலான நிலைக்குத் தள்ளி யுள்ளனர்.

இண்டியா கூட்டணியில் அங்கம் வகிக் கும் ஒவ்வொரு கட்சியும் ஆர்.எஸ்.எஸ். ஸின் அடிப்படை சித்தாந்தத்தை எதிர்க் கிறது. அதில் நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம். எங்களுக்குள் சில போட்டி கள் உள்ளன. அது தொடர்ந்துகொண்டு தான் இருக்கும். ஆனால் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையைக் காட்டவேண்டிய நேரம் வரும்போது, நீங்கள் நாடாளுமன்றத்தில் பார்த்ததுபோல் அதை வெளிப்படுத்து வோம். நாங்கள் மிகவும் ஒற்றுமையாக இருக்கிறோம், பா.ஜ.கவை ஒற்றுமை யுடன் எதிர்ப்போம்.” என்று தெரிவித் துள்ளார்.

# தீவிர தேர்தல் பணியில் அ.தி.மு.க - பா.ஜ.க: பழனிசாமி உடன் பியூஷ் கோயல் சந்திப்பு

சென்னையில் நேற்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனி சாமியை, தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சரு மான பியூஷ் கோயல் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சரான பியூஷ் கோயலை தமிழக சட்டப்பேரவை தேர்தல் பொறுப் பாளராக பா.ஜ.க. சமீபத்தில் நியமித் தது.

இந்நிலையில், பியூஷ் கோயல் ஒருநாள் பயணமாக டில்லியில் இருந்து சென்னைக்கு நேற்று சென்றார். தி.நக ரில் உள்ள பா.ஜ.க. அலுவலகமான கம லாலயத்தில் பா.ஜ.க. நிர்வாகி களை சந்தித்து ஆலோசனை நடத் தினார்.

அதன் பின்னர், சென்னை எம்.ஆர்.சி நகரில் உள்ள நட்சத்திர விடுதியில் பியூஷ் கோயல், எடப்பாடி பழனிசாமி ஆகி யோர் பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்த பேச்சு வார்த்தையின்போது, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பா.ஜ.க தமிழக தேர்தல் பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, மாநில தலைவர் நயினார் நாகேந் திரன், தமிழக பா.ஜ.க. தேர்தல் இணை பொறுப்பாளர் அர்ஜுன் ராம் மெக்வால், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, தங்கமணி, திண்டுக் கல் சீனிவாசன், கே.பி முனுசாமி உள் ளிட்டோர் உடனிருந்தனர்.





# போர்க் கப்பல் கட்டுமானத் திட்டத்தினை அறிவித்தார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய போர்க் கப்பல் கட்டுமானத் திட்டத்தை அறிவித்துள்ளார். அந்தக் கப்பல்களுக்கு தனது பெயரையும் சூட்டியுள்ளார். 'ட்ரம்ப் க்ளாஸ்' கப்பல்கள் என்று இவை அழைக்கப்படும். இந்த வகை போர்க் கப்பல்கள் கொண்ட படை 'கோலட்ன் ஃப்ளீட்' எனப்படும் என்று பெருமிதத்தோடு ட்ரம்ப் அறிவித்தார்.

பொதுவாக அமெரிக்க ஜனாதிபதிகள் வரலாற்றில் அவர்கள் பணிக்காலத்தில் நாட்டின் போர்க் கப்பலுக்கு அவர்களின் பெயர் சூட்டப்படுவதில்லை. அதிலிருந்து தனக்கு விதிவிலக்கு கொடுத்துக் கொண்டு அவற்றுக்கு சொந்த நாமகரணம் செய்துள்ளார் ட்ரம்ப்.

மேலும், அவர் 'ட்ரம்ப் க்ளாஸ்' போர்க் கப்பல்களை அறிவித்தபோது அவருக்கு இருபுறமும் அந்தக் கப்பலின் மாதிரி தோற்றம் கொண்ட புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை 'ட்ரம்ப் க்ளாஸ்' போர்க் கப்பல்களின் பிரம்மாண்டத்தை உணர்த்துவதாக இருந்தன.

இந்தக் கப்பல் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் தொன் வரை எடை கொண்டிருக்கும். அமெரிக்க வரலாற்றில் மிகப் பெரிய போர்க் கப்பலாக இருக்கும். இதில் சாதாரண ஏவுகணைகள் தொடங்கி லேசர், ஹைபர்சோனிக், தொலைதூர ஏவுகணைகள் வரை அனைத்தும் இருக்கும். மேம்படுத்தப்பட்ட ஏ.ஐ. தொழில்நுட்பங்கள் இருக்கும். அணு ஆயுதங்களும் கூட இருக்கும். இந்தக் கப்பல் கட்டி முடிக்கப்படுவதற்குள் இப்போது ஆய்வில் இருக்கும் இன்னும் பல நவீன ஆயுதங்களும் இணைக்கப்படக் கூடும் என்று தெரிகிறது.

இந்த பிரம்மாண்ட கப்பல் பற்றி ட்ரம்ப் ஃப்ளோரிடாவில் உள்ள தனது மாளிகையில் இருந்து பேட்டி கொடுத்தார். அப்போது ட்ரம்ப்புடன் பென்டகன் இராணுவத் தலைமையகத்தின் தலைவர் பீட் ஹெக்ஸத் இருந்தார். கூடவே வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, கடற்படை செயலர் ஜான் ஃபீலன் இருந்தனர்.

இதன்போது டொனால்ட் ட்ரம்ப் கருத்து தெரிவிக்கையில்,

"அமெரிக்காவின் மிகப் பெரிய கப்பல் கட்டுமான சக்தியை மீட்டெடுக்கப் போகிறோம். உலகிலேயே அமெரிக்காவிடம் தான் மிகவும் சக்திவாய்ந்த கப்பல்படை உள்ளது என்பதை மெய்ப்பிப்போம். நம்மிடம் மிகப் பெரிய போர்க் கப்பல்கள் இருந்துள்ளன. ஆனால் அவற்றைவிடவும் இந்தக் கப்பல் பெரியது. இந்த ட்ரம்ப் க்ளாஸ் கப்பல்கள் 25 வரை கட்டத் திட்டமுள்ளது. ஆனால், முதல் கட்டமாக 2 கப்பல்கள் கட்டப்படும். அவற்றின் கட்டுமானப் பணி இரண்டரை ஆண்டுகளில் முடிவுறும். இந்தக் கப்பல் கட்டுமானப் பணி நிமித்தமாக ஆயிரக் கணக்கான வேலைவாய்ப்பு உருவாகும்." என்று தெரிவித்துள்ளார்.












# உக்ரைன் முழுவதும் மின்வெட்டு: யுத்த களமாகும் எரிசக்தி நிலையங்கள்

உக்ரைனின் எரிசக்தி உட்கட்டமைப்புகளை இலக்கு வைத்து ரஷ்யா முன்னெடுத்த பாரிய ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்களால், உக்ரைன் முழுவதும் மின்சார விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துமஸ் வாரத்தை முன்னிட்டு ரஷ்யா இந்தத் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

உக்ரைனின் தலைநகர் கீவ் உட்பட ஒடெசா, ரிவ்னே, டெர்னோபில் மற்றும் க்மெல்னிட்ஸ்கி ஆகிய மாகாணங்களில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விநியோகக் கட்டமைப்புகள் மீது ஏவுகணைகள் வீசப்பட்டன.

சுமார் 600 இற்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் பல ஏவுகணைகளை ரஷ்யா ஏவியுள்ளதாக உக்ரைன் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து, மின்சாரக் கட்டமைப்பிற்கு மேலதிக சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், மின்சாரத் தேவையைச் சமநிலைப்படுத்தவும் நாடு முழுவதும் அவசர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மேற்கு யுக்ரைனில் உள்ள பல நகரங்கள் முற்றிலும் இருளில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில், பாதுகாப்புச் சூழல் சீரடைந்தவுடன் உடனடியாகப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என உக்ரைனிய மின்சார சபை தெரிவித்துள்ளது.

மேலும் மக்கள், மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும், அனர்த்தங்களுக்குத் தயாராக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் மியாமியில் அண்மையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னரும், ரஷ்யா தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளமை சர்வதேச அளவில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 24.12.2025




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.

இன்று நிதிக் கட்டுப்பாடு காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை.

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கூடுதல் சுமையாக இருக்கும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். லாபம் தரும் முதலீட்டிற்கான பயனுள்ள திட்டங்களில் பங்கு கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்றைய தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாக காணப்படும்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இதனை தவிர்க்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். பல வாய்ப்புகள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

நீங்கள் பொறுப்புடனும் சிரத்தையுடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். கடினமான பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்தத்தில் உங்கள் செயல் திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாகவும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதுமானதாகவும் இருக்கும். உங்களால் சேமிப்பு நிலையை உயர்த்த இயலும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்களுக்குக் கூடுதல் செலவுகள் ஏற்படும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.12.2025




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருப்பீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக உங்களுக்கு வளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது.




இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்டமிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியனா தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம்.




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்கவேண்டும்.

நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

# பாடசாலைகளுக்கு வருட இறுதி விடுமுறை




( வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் உள்ள தமிழ், சிங்களப் பாடசாலைகளுக்கு நேற்று 23.12.2025 முதல் 04.01.2026 வரையும் – முஸ்லிம் பாடசாலைகளுக்கு வரும் 27.12.2025 முதல் 04.01.2026 வரையும் – விடுமுறை வழங்கப்படுகின்றது.

கல்வி அமைச்சின் செயலாளர் மேற்படி விடுமுறை சுற்றுநிருபத்தை அனுப்பி வைத்துள்ளார்.

சகல பாடசாலைகளும் புதிய கல்வி ஆண்டுக்காக வரும் 05.01.2026 ஆரம்பமாகின்றன.

# மட்டு நகர்ப் பகுதியில் கிணற்றில் இருந்து வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்பு

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள திசவீரசிங்கம் சதுக்கம், ஆறாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் கிணற்றில் இருந்து 71 வயதுடைய வயோதிப பெண் ஒருவர் நேற்று செவ்வாய்க் கிழமை காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸர் தெரிவித்தனர்.



நோய்வாய்ப்பட்டிருந்த 71 வயதுடைய வயோதிப மாதுவே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு பொலிஸ் தடயவியல் பிரிவினர் அழைக்கப்பட்டனர். திடீர் மரண விசாரணை அதிகாரி நஸீர் விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நீதிமன்ற அனுமதி பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக நேற்று முற்பகல் பொலிஸை தெரிவித்தனர்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைமட்டு.தலைமையகப்பொலிசார்மேற்கொண்டு வருகின்றனர்.